Registered as a NewsPaper

1001 JUL 2004
PUBLIC LIBRARY
JAFFNA

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 திருவள்ளுவர் ஆண்டு 2035 ஆனி–26 10–07–2004 சனிக்கிழமை ஓசை –143

S.M கோல்ட் ஹவுஸ்
காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9944 077-6059672

## வட–கிழக்கு மனித உரிமை செயலகம் கிளி.யில் நேற்று ஆரம்பித்து வைப்பு

### புலிகள், தமிழ் தே.கூ.பா.உறுப்பினர்கள் பங்கேற்பு

(அலுவலகசெய்தியாளர்)

வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் நேற்று கிளிநொச்சியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு ஆரம்பித்து வைக் கப்பெற்ற மேற்படி செயலகக் கூட்டத்தில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ நீதி நிர்வாகப்பொறுப்பாளர் பரா,விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப்

(12ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டின் ஸ்திரமற்ற நிலைக்கு சிறிலங்கா அரசே முழுப்பொறுப்பு

### –புதிய இடதுசாரி முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்று புதிய இடதுசாரி முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாக நாட்டில் ஸ்திரமற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் தன்னாட்சி அதிகார சபை வரைவினை தமது யோசனையாக சமர்ப்பித்த போதிலும் அதற்கு இதுவரையில் அரசாங்கம் உரிய பதிலினை அளிக்கவில்லை கருணாவைப் பயன்படுத்தி அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலமிழக்கச் செய்யும் முறையினை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இது நாட்டுக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் செயற்பாடாகும். இந்த நிலையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பினையும் ஏற்கவேண்டும் எனவும் புதிய இடதுசாரிக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# மனித உரிமைகள் மோசமாக மறுக்கப்பட்டதே

# தமிழ் மக்களின்போராட்டத்திற்கு அடிப்படை!

## மனித உரிமைகள் குறித்த புலிகளின் சிந்தனை உலகை அடையவில்லை என சு.ப. தமிழ்ச்செல்வன் கவலை

**உண்மையில் உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதவுரிமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதன் அடிப்படை அம்சம் தான் இப்போராட்டத்தின் விளைவு என்ற செய்தி கூட உலகிற்குச் சரியான வகையில் கொண்டுபோகப்படவில்லை என்பதை நாங்கள் உணர்ந்துள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

நேற்று மனித உரிமைகளுக்கான புதிய செயலகம் திறந்து வைக்கப்பட்டவேளை அங்குகலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்; தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு கட்டுக்கோப்பான ஒழுக்கத்தை இறுக்கமாகப் பேணிக் கொள்கின்ற அமைப்பாகவேதோற்றம் பெற்றதெனக் குறிப்பிட்டதோடு,

நாங்கள் பல நாடுகளுக்குச் சென்ற வேளையிலும், பேச்சு வார்த்தைமேசையில் இருந்த வேளையிலும் எல்லா இடங்களிலும் எமக்கு எதிராக அவர்கள் தூக்கிய ஒரே ஒரு ஆயுதம் மனித வுரிமைகள் இது சம்பந்தமாக நாங்கள் எங்களுடைய மனதிற்குள் நினைப்போம் மனிதநேயமும் மனிதவுரிமையும் சன

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு .கல்லடிப்போடையில் கிராம அலுவலர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடிப்போடையில் கிராம அலுவலர் ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப் பலியாகியுள்ளார்.நேற்று மாலை நடந்த இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியான கரடியனாறு பிரிவின்கிராம அலுவலரான குஞ்சுத்தம்பி சிவராசா (வயது 47) என்பவராவார்.

இவர் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப்பிரதேசமான கல்லடிப்போடையில் உள்ள அவரது வீட்டில் இருந்தசமயம், அவரது வீட்டிற்கு மேட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் அவரது பெயரைச் சொல்லிக் கூப்பிட்டு துப்பாக்கியால் சுட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளனர்.

## இல.தே.காவற்துறை ஆணைக்குழு மீது ஆசியன் ம.உ.ஆணைக்குழு கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா தேசிய காவல்துறை ஆணைக்குழு, பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக உரிய விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சுமத்தியுள்ளது.

காவல்துறையினர் பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் வதை இம்சைகள் என்பவை தொடர்பான முறைப்பாடுகளை இந்த ஆணைக்குழு விசாரணை செய்யவில்லை எனத் தெரிவிக்கும் ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொது மக்களின் முறைப்பாடுகளை உரிய முறையில் விசாரணை செய்ய முடியாவிட்டால்,காவல் துறை ஆணைக்குழுவின் தலைவர் பதவி விலக வேண்டும் எனக் கேட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 6 மாகாண சபைகளுக்கான தேர்தல் இன்று

(கொழும்பு)

ஆறு மாகாணசபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இதற்கான சகலஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளதாகத் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது. இந்தத் தேர்தலில் வாக்களிக்க 95இலட்சத்து 81ஆயிரத்து 331பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்கள் 763 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கவுள்ளனர்.

இதில் 23பதிவு செய்யப்பட்டுள்ள கட்சிகளையும், 35 சுயேட்சைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வைத்தியசாலையினுள் கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

### -பொதுமகன் ஒருவர் காயம்

யாழ்.போதனா வைத்தியசாலையின் 24ஆம் இலக்க நோயாளர் விடுதியில் வைத்துப் பொதுமகன் ஒருவர் கூரிய ஆயுதமொன்றால் குத்திப்படுகாயப்படுத்தப்பட்டுள்ளார். காயமடைந்த பொதுமகன் பின்னர் அதே விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில், நேற்றுக் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவர்களான இருவர் காயமுற்று 24ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று சிறப்புற நடந்த நிதர்சனத்தின் நான்கு படைப்புகளின் வெளியீடு!

கரும்புலிகள் நாளன்று நிதர்சனம் நிறுவன்த்தின் ஏற்பாட்டில் தமிழீழத் தேசியத் தலைவரால் வெளியிட்டு வைக்கப்பட்ட புயல் பூத்த பூக்கள் வீடியோப் படம் மற்றும் கடற்கரும்புலிகள் பாகம்-07, பாகம்-08 பாடல் இசைத்தட்டுக்கள் நேற்று சிறப்பான முறையில் மக்கள் மத்தியில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஞானரதனின் புயல் பூத்த பூக்கள் வீடியோப்படம், செயல்வீரனின் கடற்கரும்புலிகள் பாகம்-07,பாகம்08 பாடல் இசைத்தட்டுகள், உயிராயுதம் 05வீடியோ விவரணம் போன்றவற்றின் வெளியீட்டு விழா போராளிக்கலைஞன் வீராவின் தலைமையில் நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)



## வரிவிளம்பரம்

### இறைவனுக்கு நன்றி தெரிவிப்போம்

உலக சமாதானம் வேண்டி வெள்ளிக்கிழமைகள் தோறும் விசேட வழிபாடுகளை வழிபாட்டுத் தலங்கள் தோறும் மேற்கொள்க இலங்கை இந்து இளைஞர் பேரவை, திருகோணமலை. (4774)

### மீட்டல்வகுப்பு

கேம்பிறிஜ் கல்லூரி, உதயநகர் மேற்கு, கிளிநொச்சி. A/L 2005இற்கான கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகப் பிரிவு மாண வர்களுக்கான துரிதமீட்டல் வகுப்பு. காலம்:- 10.07.2004 (மாலை 4.00மணி) தனித்துவம் மிக்க ஆசி ரியர் குளாமால் ஆரம்பிக்கப்படும். நிர்வாகி (4633)

### வாடகைக்கு

கிளிநொச்சி-கரடிபோக்கில் உள்ள இளையவி கட்டட தொகுப் பில் அலுவலகப்பாவனைக்கு/ வியாபார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய ஒரு கடைக் கட்டடமும் இரு மேல்மாடி அறை களும் வாடகைக்கு உண்டு நேரில் அல்லது TP.226/3818 (4789)

### காணிவிற்பனைக்கு

காணிவிற்பனைக்குண்டு மாங்குளம், துணுக்காய் வீதியில் வன்னிவிளாங்குளம், முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அண்மை யில் 10ஏக்கர் காணி பெரிய கிணற் றுடன் நெற்செய்கைக்கு ஏற்ற குளத்து நீர்ப்பாசனக்காணி விற் பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- சி.சத் தியமூர்த்தி, சத்தியவாசா, ஆஸ் பத்திரி வீதி , சங்கானை. (4128)

### தவறிவிட்டது

சுந்தரலிங்கம் பிரபாகரன், ஸ்கந்தபுரம், அ.அ.இ. 752313423V போக்குவரத்து பயண அனுமதி அட்டை, தொலைந்த திகதி- 24.06.2004, தொலைந்த இடம் புளியங்குளத்திற்கும், கந்த புரத்திற்கும் இடையில் கண்டெடுத் தவர்கள் ஈழநாதம் பணிமனை அல்லது கிளிநொச்சி அழகியல் காலமன்றத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (4790)

### தவறிவிட்டது

திருமதி சுப்பிரமணியம் தேவிகா முள்ளியவளை கிழக்கை வசிப்பிடமாகவும் மாமூலை தண் ணீரூற்று என்னும் முகவரி இடப் பட்ட தேசிய அடையாள அட்டை அடங்கிய சிறிபேஸ் புதுக்குடியி ருப்பு பேருந்து நிலையத்திற்கும் புதுக்குடியிருப்பு சந்திக்குமி டையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் புதுக்குடியிருப்பு ஈழநா தம் பணிமனையில் ஒப்படைக் கவும். (4665)

## இளைஞருக்கு தொழிற் பயிற்சி

(வடமராட்சி)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் போரூட் நிறுவனம் என்பவற்றின் உதவியுடன் வடமராட்சி நல் லொழுக்க நிறுவனம் இளை ஞர்களுக்கான தொழிற் பயிற்சி நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளது.

இதன் ஓர் அங்கமாக கரவெட்டி பருத்தித்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட ஐம் பது இளைஞர்களுக்கான வீட்டு மின்னினைப்புப் பயிற்சி நெறி கடந்த வியாழக்கிழமை ஆரம் பித்துவைக்கப்பட்டது. தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமுக நிலைய வளாகத்தில் இடம் பெறும் இப்பயிற்சி நெறி ஆறுமாத காலத் தைக் கொண்டதாகும். (27)

### தவறிவிட்டது

*நல்லபிள்ளை நர்மளா அடையாள அட்டைஇலக்கம் 818502290V நிரந்தர பயண அட்டை15270 பல்கலைக்கழக அடையாளஅட்டை 04.07.2004 பரந்தன் முல்லைத்தீவு பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கு மாறு கேட்டுக் கொள்கின்றேன் தகவல் ந.நர்மளா.* (4787)

## பேருந்துச் சேவை வேண்டும்

(தென்மராட்சி)

சாவகச்சேரி,புத்தூர்சந்தி ஊடாக சங்கானை செல்லும் பேருந்துத் தடம் இலக்கம் 775 நிறுத்தப்பட் டுள்ளது. இது குறித்துப் பலமுறை போக்கு வரத்துச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட் டும் இது வரை எதுவித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை. (28)

## துயர் பகிர்கின்றோம்

### வே. குமாரசாமி

முல்லை. பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பா ளராகிய சுரேஸ் குமாரின் தந்தையார் வே. குமாரசாமி அவர்கள் காலமாகிய செய்தியைக்கேட்டு ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் அவரது மகனான சுரேசுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் கண்ணீரையும் காணிக்கையையும் செலுத்துகின்றோம்.

முல்லை. பொருளாதார அபிவிருத்தி
நிறுவனப் பணியாளர்கள், பணிப்பாளர்கள்.

(9141)

## கண்ணீர் அஞ்சலி



### திரு. இராமச்சந்திரன் சந்திரபோஸ்

பாரதிவித்தியாலய ஆசிரியை செல்வி சந்திரப்பிரியா ராமச்சந் திரன் அவர்களின் அன்புச் சகோதரன் திரு. இராமச்சந்திரன் சந்திரபோஸ் அவர்களின் அகாலச் சாவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் பங் கேற்றுக் கொள்வதோடு, அன் னாரின் ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி சாந்தி!

கிளி/பாரதி வித்தியாலயம்,
அதிபர்,ஆசிரியர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்.

(4797)

## 12ஆம் ஆண்டில் நீங்காத நினைவுகள்

பிறப்பு 02 - 03 - 1971



வீரச்சாவு 10 - 07 - 1991

### லெப். சியாஸ்

#### கிங்சிலி யோசப் இராசரட்டினம்

எமக்கு பெருமை சேர்த்த அருமை உறவே
ஆண்டுகள் பன்னிரண்டு ஆயினும் எம்மை விட்டு உன்
இழப்பு எம்நினைவில் இன்னும் இழக்கவில்லை.
எம்மை விட்டு அகலா உனது நீங்கா நினைவை
உயிருள்ளவரை உள்ளத்தில் சுமந்து நடப்போம்.

*முகவரி:-*
*99, செல்வபுரம்,*
*வவுனிக்குளம்.*

(4794)

தகவல்
குடும்பத்தினர்.


## கலாலயா

பயிற்சியகம்

(பெருமான் கோயிலுக்கு அண்மையில்) யாழ்ப்பாணம்.

### மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

**கேக் ஐஸிங்** — சகல விதமான ஐஸிங் மற்றும் மாச்சீனி மலர்கள். (SUGAR CRAFTING)

**உணவுகள் தயாரித்தல்** — மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள் VEGETABLE CRAFTING செய்தல்.

**கூந்தல் அலங்காரம்** — 20 விதமான கொண்டைகள் போடுதல்.

**FABRIC PAINTING-** SAREE PAINTING, POTPAINTING, EMBOSS PAINTING கைக்குட்டை, கதிரை விரிப்புக்களில் வர்ணந்தீட்டுதல்.

❋ மேற்குறித்த பயிற்சிகள் 3 மாதகாலம் நடைபெறும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**உடைதயாரித்தல்** — குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள் தைத்தல்.

**கைவேலை** — பேப்பர் அலங்காரம், SOFT TOYS, கழிவுத்துணி வேலை, றிபன்வேலை, முத்துமாலை கோர்த்தல், CRYSTAL வேலை.

**மலர்கள் செய்தல்** — கடதாசியிலும் துணிகளிலும் மலர்கள் செய்தல், மலர்ச்செண்டு (BOUQUET) செய்தல்.

மேற்குறித்த பயிற்சிகள் 6 மாதகாலம் நடைபெறும். இத்துடன், அடிப்படை FACIAL அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் வித்தியாசமான முறைகளில் சேலை அணியும் முறையும் 2நாள் வகுப்புகளாக நடைபெறும்.


கிழமைநாள் மற்றும் சனி-ஞாயிறு புதிய வகுப்புகளுக்கு மாணவிகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.30மணிவரை அறிந்துகொள்ளலாம்.

(சி-10114) பதிவாளர்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 08 - 04 - 1972



இறப்பு 11 - 06 - 2004

### அம்புறோஸ் அலெக்ஸ்புறூஸ்ரன் (ஜெனி)

#### வெற்றிலைக்கேணி முள்ளியான்

வித்தகமாய்
எம் சித்தகத்தீவில்
சிறகு விரித்த
சிறு குருவி -உன்
சிறகொடித்த
கொடியவர் யார்?

மெல்ல ஒளி சூழ்ந்து
நாம் வாழும் நேரத்தில்
ஏன் போனாய்- எமைவிட்டு
மரணத்தின் ஓரத்தில்

ஈரச் சிறகுலர்த்தி
வீரச் சிரிப்போடு
வீதியெலாம்
திரிந்தாயே - விதியாலே
எமைப்பிரிந்தாயே!

*இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11.07.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அதன்பின் அன்னாரின் இல்லத்தில் இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு இவரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

வெற்றிலைக்கேணி,
முள்ளியான்.

(4796)

# சுதந்திரத் தாய்வானை ஏற்கமாட்டோம் சீன அரசு திட்டவட்டமாக அறிவிப்பு

-அமெரிக்க நிலைப்பாட்டையும் அறிய ஆவல்

(பெய்ஜிங்)

**தாய்வானின் சுதந்திரத்தை சீனா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்த விடயம் தொடர்பாக அமெரிக்கா தெளிவான கருத்தை வெளியிட வேண்டும் எனச் சீனா வலியுறுத்தியுள்ளது.**

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் கொண்ட லிசா ரைஸ் சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். நேற்று முன்தினம் காலை தலைநகர் பெய்ஜிங் போய்ச்சேர்ந்த அவர், சீன சனாதிபதியை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

முன்னதாக சீன இராணுவத் தளபதியுடனும் வெளிவிவகார அமைச்சர் ஜீசாசிங்குடனும் பேச்சுவார்த்தையினை நடத்தியுள்ளார். சீன சனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது தாய்வான் விவகாரம், வடகொரிய அணுசக்தி பிரச்சினை என்பன முக்கிய அம்சங்களாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

சீன இராணுவத்தளபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது சீன இராணுவத் தளபதி கருத்து வெளியிடுகையில் சீன அமெரிக்க உறவு களில் தாய்வான் விவகாரம் முக்கிய அம்சமாகும் என்று கூறியதுடன் தாய்வானின் சுதந்திரத்தை சீனா ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்றும் கூறிய சீன இராணுவத்தளபதி இந்த விடயம் தொடர்பாக அமெரிக்கா அதன் தெளிவான கருத்தை வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதற்குப் பதிலளித்த அமெரிக்கப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசாரைஸ் ஒரே சீனா என்ற கொள்கையை அமெரிக்கா கொண்டிருப்பதாக சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ் திட்டவட்டமாகக் கூறியுள்ளார் என்று தெரிவித்தார்.

# நிதிதிரட்டல்

(புதுடில்லி)

சேது சமுத்திரத் திட்டத்திற்கு மத்தியரசு சிறப்பு நிதிதிரட்டும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபின்னர் நிதியமைச்சர் சிதம்பரம் இதனை செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.




தமது கொடுப்பனவுகளை வழங்க மறுத்த தென்கொரிய தொழிநுட்ப நிறுவனத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோரைக் கட்டுப் படுத்தும் படையினர்

# அமெரிக்க சனாதிபதிக்கான மக்கள் ஆதரவு அதிகரிப்பு

(வோஷிங்டன்)

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவின் நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் தற்போதைய சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூபுஷ் முன்னணியில் இருப்பதாகக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

ஜோர்ஜ் டபிள்யூபுஷ் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் அதேவேளை புஷ்சிற்கு எதிராக சனநாயகக்கட்சி சார்பில் ஜோன் ஹெரி போட்டியிடுகின்றார். இருவரும் தீவிரத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்காவில் அசோஸியேட்டஸ் பிரஸ் கடந்த மூன்று நாட்களாக நடத்திய கருத்துக் கணிப்பில் புஷ் 49சதவீத ஆதரவுடன் முன்னணி வகிக்கின்றார். ஜோன்ஹெரிக்கு 45 சதவீத ஆதரவு இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சுயேட்சையாகப் போட்டியிடுபவர் 3சதவீத ஆதரவைப் பெற்றுள்ளார்.புஷ்சின் பொருளாதார நடவடிக்கைகள் உள்நாட்டுப் பிரச்சினைகளைக் கையாண்ட விதம் ஆகியவற்றால் புஷ் முன்னணியினைப் பெற்றிருப்பதாக இந்தக் கருத்துக் கணிப்புக் கூறுகின்றது.

# வன்முறைகளை எதிர்கொள்ளத் தயார் ஈராக்கில் புதிய நடவடிக்கைகள் ஆரம்பம்

-பிரதமர் இயத் அலாவி அறிவிப்பு

ஈராக்கில் புதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்றிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நெருக்கடி நிலைமையினை பிரகடனப் படுத்துவதற்கும் வெளிநாட்டவர்களின் நடமாட்டத்திற்கு தடைகள் விதிக்கவும் இன் நடவடிக்கை ஈராக் பிரதமருக்கு பரவலான அதிகாரத்தினை வழங்குகின்றது.

இதேவேளை நாட்டில் நிகழும் வன்முறையை எதிர்கொள்வதுதான் தம்முடைய முதல் நோக்கமென்று பிரதமர் இயத் அலாவி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடந்த மாதம் சுமார் 400 ஈராக்கியர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

# இரு பல்கேரியரின் தலைகளை துண்டிக்கப் போவதாக எச்சரிக்கை!

அமெரிக்கா இராணுவத்தினரால் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ஈராக்கியர்களை 24 மணிநேரத்தினுள் விடுவிக்காது விட்டால் கடத்தப்பட்ட பல்கேரியா நாட்டைச் சோர்ந்த இருவரது தலைகளையும் துண்டிக்கப் போவதாக, ஈராக்கின் தீவிரவாதிகள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

ஈராக்கில் கடத்தப்பட்ட பல்கேரிய நாட்டவரை பிணைக்கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டுள்ளமையை அல்-அஜீராத் தொலை காட்சிக்குத் தீவிரவாதிகள் படம் பிடித்து அனுப்பிவைத்துள்ளனர். இதனை அல் அஜீரா தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்துள்ளது.

அதில் ஈராக்கியர்களை அமெரிக்கா சிறைப்பிடித்து வைத்துள்ளது. அவர்களை விடுதலை செய்யாது விட்டால் பல்கேரியர்கள் இருவரும் கொல்லப்படுவார்கள் என்றும் ஈராக்கிற்குப் படைகளை அனுப்பியுள்ள பல்கேரியாவே இதற்கு முழுப்பொறுப்பு என்றும் எச்சரிக்கை செய்துள்ளனர்.

PUBLIC LIBRARY JAFFNA

# பாதுகாப்புத் துறையை நவீனமயப்படுத்த நிதிநிலை அறிக்கையில் அதிகநிதி!

*-இந்திய பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு*

(புதுடில்லி)

பாதுகாப்புத் துறையினை நவீன மயப்படுத்துவதற்காகவே இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று இந்திய நிதியமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார்.

பாதுகாப்புத் துறைக்கு புதிய 2004-2005 நிதிநிலை அறிக்கையில் ஒரு இலட்சத்து 54ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி நேற்று முன்தினம் பி.பி.சி.க்குப் பேட்டியளித்த நிதியமைச்சர், பாதுகாப்புத்துறைக்கு அதிகநிதி ஒதுக்கீடு செய்திருப்பது சண்டைப்போக்கைக் குறிப்பிடுவதாக இல்லை. பாதுகாப்புப் படைகளை நவீனமாக்கும் பணிக்கான செலவுகளாகவே அமையும் என்று கூறியுள்ளார்.


இந்த ஒதுக்கீடு கடந்த ஆண்டு ஒதுக்கீட்டினைவிட இரண்டு இலட்சத்து 34ஆயிரம்கோடிரூபா அதிகமாகும் அதாவது 23சதவித அதிகரிப்பாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பயங்கரவாதத்தை ஒழிக்கும் கடப்பாட்டை பாகிஸ்தான் உறுதியுடன் நிறைவேற்ற வேண்டும்

-ரஷ்யா வலியுறுத்து

(மொஸ்கோ)

பயங்கரவாதத்தை ஒழிப்பது எனும் தனது கடமையைப் பாகிஸ்தான் உறுதி பட் நிறைவேற்ற வேண்டும் என்று ரஷ்யா வலியுறுத்தியுள்ளது.



புதுடில்லிக்கு வருகைதந்துள்ள சிங்கப்பூர் பிரதமர் கோஷொக்கை சனாதிபதி மாளிகையில் சந்திக்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்

ரஷ்யாவுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முகமது கசூரி பயணமாகவுள்ள நிலையில், நேற்று முன்தினம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் ரஷ்ய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் இயாக்கோ வெங்கோ இவ்வாறு கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

எல்லை கடந்த பயங்கரவாதம் மற்றைய நாடுகளுக்கு ஊடுருவுவதை முதலில் பாகிஸ்தான் முற்றிலுமாகத் தடைசெய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## எதிர்ப்பு

சூடானின் டர்பர் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையானோர் படுகொலை செய்யப்பட்டு வருவதன் காரணமாக அந்நாட்டின் மீது பொருளாதாரத்தடை கொண்டுவரப்பட வேண்டுமென்ற அமெரிக்காவின் பிரேரணைக்கு ஐ.நா.பாதுகாப்புச்சபையில் சீனா, ரஷ்யா பாகிஸ்தான் உட்பட 6இற்கும் மேற்பட்ட நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.



கிழக்கு ஸ்பெயினில் உள்ள விலங்குகள் ஆய்வு நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள மிகப் புராதன ஐரோப்பிய டைனோசர்ஸின் எலும்புக்கூட்டை ஊடகவியலாளர்களிடம் காண்பிக்கும் அதிகாரிகள்

# இந்தியாவின் நடவடிக்கைகளால் பாகிஸ்தான் பெரிதும் அதிருப்தி

(இஸ்லாமாபாத்)

பாதுகாப்புத்துறைக்கு புதிய இந்திய அரசு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது இப்பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியைத் தீவிரப்படுத்தும் என்று பாகிஸ்தான் நேற்று கூறியுள்ளது.

இந்திய அரசின் நிதி ஒதுக்கீடு பற்றிக் கருத்துக் கூறிய பாகிஸ்தான் வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் மௌசூத்கான்,

பாகிஸ்தானும், இந்தியாவும் நம்பிக்கை மேம்பாட்டிற்கான முயற்சிகளை மேற்கொள்வது என்றும், பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது என்றும் இரட்டைவழி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் இப்பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் செழிப்பிற்கான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கையில் இந்தியா இவ்வாறு பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது கவலையளிக்கின்றது என்று கூறியுள்ளார்.

# திருமலை-தம்பலகாமத்தில் ஆயிரம் ஏக்கர் மேய்ச்சற் காணியை கடற்படைக்கு ஒதுக்க ஏற்பாடு

## நிறுத்துமாறு சனாதிபதிக்கு பா. உறுப்பினர் துரைரட்ணசிங்கம் கடிதம்

(திருகோணமலை)

**தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவின் கீழ் பாலம்போட்டாறு கிராமத்தின் வடக்குப் புறமாக மேய்ச்சற் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் ஆயிரம் ஏக்கரை இலங்கைக் கடற்படையினருக்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

இதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கம் கோரியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது, "கண்டி வீதியில், பாலம் போட்டாறுகிராமம் அருகே மேய்ச்சற் தரைக்காக 2000 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. தம்பலகாமம்,பாலம்போட்டாறு,கல்மெட்டியாவ ஆகிய பிரதேச மக்கள் விவசாயம் மற்கொள்வதற்காக கடவானைக்குளம், அட்டாவனைக்குளம், கல்மெட்டியாவக்குளம் ஆகியவற்றின் கீழ் காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் காணிகள் ஒதுக்கப்பட்டன. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் இடம் பெயர்ந்த குடும்பங்கள் படிப்படியாக சொந்த இடங்களுக்குத் திரும்பி வருகின்றன. இப்போது இப்பிரதேசத்தில் சுமார் பத்தாயிரம் கால்நடைகள் உள்ளன. யுத்த காலத்திலும் இம்மேய்ச்சற் தரையை சுமார் 2000 கால்நடைகள் பயன்படுத்தி வந்தன. இப்போது இக்காணியில் 1000 ஏக்கரை இலங்கைக் கடற்படைக்கு ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிகிறேன். கடற்படையினரின் முகாம் இப்பிரதேசத்தில் கண்டி வீதியிலிருந்து பத்து கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது. (மூன்று கிராமங்களில் வாழும் மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியன விளங்குகின்றன. மேய்ச்சற் தரையின் ஒரு பகுதியை கடற்படைக்குக் கொடுப்பதால்,இப்பகுதியில் வாழும் மக்கள் பொரு:ாதார ரீதியாக பாதிப்புக்குள்ளாவர். மக்களின் நலன்களுக்குப் பாதகமாக காணிகளை அரசபடையினருக்கு வழங்கக்கூடாது தற்போதைய இன நெருக்கடிக்கு காணிப்பங்கும் ஒரு காரணமாகும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தனது கடிதத்தில் கூறியிருக்கிறார். (25)

## ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஏற்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புமுகமாக பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

01. க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கிலப்பாடத்தில் புதிய பாடத்திட்டமாயின் A அல்லது Bயும் ,பழைய பாடத்திட்டமாயின் D அல்லது C யும்,02. க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தியும் பெற்றிருப்பதுடன், ஓர் எழுத்துப்பரீட்சைக்கும், நேர்முகத் தேர்விற்கும் தோற்றுமாறு வேண்டப்படுவர். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 14.07.2004 புதன்கிழமை அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய தாக பதிவுத்தபால் மூலம் வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிமனை, முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## பாதை திருத்தப்படாததால் இராமநாதபுரம் மக்கள் விசனம்

(கிளிநொச்சி)

கிளி. வட்டக்கச்சி சந்தையடிப் பகுதியில் இருநது இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் வீதியில் நாவலடிக்கு அண்மையில் உள்ள நீர்ப்பாசன வடிகால் பாதை (கோஸ்வே) மண்ணரிப்பிற்கு உள்ளாகி வெகுவாக சேதமடைந்துள்ளது.

இராமநாதபுரம் பகுதிக்குச் செல்லும் வாகனங்களும், சந்தைக்கு அன்றாட தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு வரும் பொதுமக்களும் இப்பாதையையே பயன்படுத்தி வருகின்றனர். இப்பாதை மிக நீண்ட காலமாக திருத்தப்படாதுள்ளது. இதனைத் திருத்த சம்பந் தப்பட்டவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முன்வராததையிட்டு மக்கள் விசனமடைகின்றனர். (15)

## நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவுப் பிரதேச நிலையத்தில் 2004/2006 கல்வி மாணிப்பட்டக் கற்கை நெறியின் தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கான நேர்முகத் தேர்வு முல்லைத்தீவு வயலக் கல்விப்பணிமனையில் 11-07-2004 அன்றுமுற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நேர்முகத் தேர்வுக்குத் தெரிவானோர் பெயர் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. இவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

திரு. பேரின்பநாயகம் யோசெப் (இரணைப்பாலை றோ.க.ம.வி), செல்வி. தம்பு தெய்வமணி (பாரதி வித்தியாலயம்), மைதிலி நாகலிங்கம் (ஒட்டுசுட்டான் இ.த.க.பாடசாலை), திருமதி.கி. சியாமினி (உடையார்கட்டு ம.வி.),திரு. கே. றகு உதயகுமார் (உடையார்கட்டு ம.வி.), செல்வி கே. சாரதாதேவி (பாரதிவித்தியாலயம்),செல்வி. கே. சுகந்தினி (குமுழமுனை ம.வி.),பாமதி சிவசுந்தரம்(தண்ணீரூற்று இ.த.க.பாடசாலை), திரு. கே. இரவீந்திரன் (கற்சிலைமடுஇ.த.க.பாடசாலை), திருமதி. ஆர். கலைவாணி பனங்காமம் (பூவரசங்குளம்அ.த.க.பாடசாலை), திருமதி. எஸ். சூரியகலா (தண்ணீரூற்றுசீ.சீ.த.க. பாடசாலை), திருமதி. பி. மேரியசிந்தா (மாத்தளன் றோ.க. பாடசாலை), செல்வி. எஸ்.கே. தவகுலரஞ்சினிதேவி (பாரதி வித்தியாலயம்), திருமதி. வி. இரவீந்திரன் (ஒட்டுசுட்டான்ம.வி.), சேகர் விஜயசித்திரா (தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை), திருமதி. எஸ். ஆனந்தராசா (வற்றாப்பளை ம.வி.), திருமதி. மஞ்சுளாதேவி சிவகுரு (கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலை), திருமதி. வி. கருணானந்தராசா (தண்ணீரூற்று சீ.சீ.த.க.பாடசாலை), திருமதி. எஸ். பாலகிருஸ்ணன் (கோம்பாவில், விக்னேஸ்வரா வித்தியாலயம்), சித்திரமேகலா நாகராசா (யோகபுரம் ம.வி.), தேவிகா கனகசபாபதி (தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை), திருமதி. வி. அழகநாயகம் (முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை), ஆர். பார்த்தீபன் (இரணைப்பாலை, றோ.க. பாடசாலை), திரு. எஸ். ஜெயச்சந்திரன் (வலயக் கல்விப் பணிமனை துணுக்காய்), திருமதி. ரி. மேரிறீற்றா (வலயக் கல்விப் பணிமனை முல்லைத்தீவு), திரு. எஸ்.எஸ். நவராசா (செம்மலை ம.வி.) (08)

## படைப்பாளிகள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூத்த பெண் படைப்பாளிகள் கௌரவிப்பும், இலக்கியப் போட்டி 2004 பரிசளிப்பும் நாளை நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு மண்டபத்தில் நாளை மாலை 3.00 மணிக்கு மேற்படி நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## பயிற்சிப்பட்டறை

(முல்லைத்தீவு)

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் கைவேலி மலர்ச்சோலை தாய்சேய் நலன் காப்பகத்தில் பெ.அ.பு. நிறுவன உதவித்திட்ட இணைப்பாளரின் தலைமையில் சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சி வகுப்பு கடந்த 29,30ஆம் திகதிகளில் நடைபெற்றது. இதில் 30 பயனாளிகள் பயன்பெற்றனர். (20)

## திருட்டு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் கூழாமுறிப்புப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சூரியமின்கலம் கடந்த 05.07.2004 அன்று களவாடப்பட்டுள்ளது.

இதன் விசாரணைகளை ஒட்டுசுட்டான் காவல்பணி மனையினர் மேற்கொண்டுள்ளனர். (20)

## பொதுக்கூட்டம்

உடையார்கட்டு மாவீரர் படிப்பக நிர்வாக புனரமைப்பிற்கான பொதுக் கூட்டம் இன்று 3.30 மணிக்கு மாவீரர் படிப்பகத்தில் நடைபெறுமென மாவீரர் படிப்பக நிர்வாகி வி.சிவமோகனா தெரிவித்துள்ளார். (19)

## வர்த்தக நிலையங்களிலிருந்த காலாவதியான பொருட்கள் அழிப்பு

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து கடந்த் 2004-07-06, 2004-07-07 ஆம் நாட்களில் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் வாணிப நிலையங்கள் மற்றும் மருந்தகங்களைப் பார்வையிட்டு பரிசோதித்தபோது உருபா முப்பது ஆயிரம் (30000/=) பெறுமதியான பிஸ்கட் வகைகள், மாஜரின், குழந்தைகளுக்கான பால்மா, உணவு வகைகள், இனிப்பு வகைகள், சோயாமீற், அரிசி, தேயிலை, பப்படம், மிக்சர் வகைகள், டிப்பிரிப்பி மற்றும் மருந்து வகைகள் உட்படப் பல பொருட்கள் வாணிபர்களின் பூரண அனுமதியுடன் எடுத்து அழிப்புச் செய்யப்பட்டன.எனவே, நுகர்வோராகிய மக்களை இது தொடர்பான பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது பொருட்களின் காலாவதித் திகதி, விலை மற்றும் பழுதானவற்றைத் தீர ஆராய்ந்து பெற்றுக் கொள்ளுமாறு நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## மக்களின் தேவைப்பகுப்பாய்வு தொடர்பான கலந்துரையாடல்

செம்மலை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு மக்களின் உடனடித் தேவைகள் தொடர்பாக கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை நாயாற்று கிராம அலுவலர் பகுதியில் காலை 10.00மணிக்கு திருமதி. அமுதராஜினி தலைமையில் நடைபெற்றது.இதில் விவசாயிகளுக்கான உதவிகள் தொடர்பாகவும், மீன்பிடி உபகரணம் வழங்குவது தொடர்பாகவும், மலசலகூடம்,பொதுக்கிணறு ஆகியன அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது. இதில் கிராம அலுவலர் திருமதி. அமுதராஜினி , கெயார் திட்ட இணைப்பாளர் திரு. கணேசலிங்கம், கடற்புலிகள் அளம்பில் பிரதேசப் பொறுப்பாளர் யாழ் மன்னன், பொது சுகாதார பரிசோதகர் T.தவராசா, முல்லை. மக்கள் நலன்புரிச் சங்கப்பிரதிநிதிகள், விவசாய விரிவாக்க உத்தியோகத்தர், அளம்பில் கிராமமக்கள் என் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கட்டடத் திறப்பு விழாவும் கற்றல் கண்காட்சியும்

(கிளிநொச்சி)

கிளி/ கல்மடுநகர் அ.த.க. பாடசாலையிலும், கிளி. இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையிலும் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளும், மாணவர்களின் கற்றல் கண்காட்சி நிகழ்வுகளும் நேற்று நடைபெற்றது.

கிளி/ கல்மடுநகர் அ.த.க. பாடசாலையில் பாடசாலை அதிபர் திரு. ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த சோழ நிலவன் ஏற்றிவைத்தார். வகுப்பறைக் கட்டடங்களை திரு. ப. அரியரத்தினம், கிளிநொச்சி மாவட்ட யுனிசெப் பிரதிநிதி ஆகியோர் திறந்து வைத்தனர்.

இந்நிகழ்வின் சிறப்புரைகளை அரசியல்துறையைச் சேர்ந்த இராமஜெயம், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்ட யுனிசெப் பிரதிநிதி ஆகியோர் நிகழ்த்தினர்.

கிளி/ இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலையில் பாடசாலை அதிபர் புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மங்கல விளக்கினை கிளிநொச்சி. வயலக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை அரசியல்துறையைச் சேர்ந்த சோழநிலவன் ஏற்றிவைத்தார். பாடசாலை அலுவலகக் கட்டடத்தை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திறந்து வைத்தார். தொடர்ந்து வகுப்பறைக் கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டன. மாணவர்களின் கற்றல் கண்காட்சி நிகழ்வுகளிலும், கட்டடத் திறப்பு விழா நிகழ்வுகளிலும் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (15)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு ஒத்துழைப்பு வழங்கக்கோரிக்கை

கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் திட்டமொன்றினை தமிழீழ சுகாதார சேவையினர் அதனுடன் சம்பந்தப்பட்ட பகுதியினரையும் இணைத்து மிகவிரைவில் செயற்படுத்தவிருக்கின்றனர். மீளக்குடியமரும் மக்கள் விட்டுச் செல்லும் நாய்களும் மற்றும் பெருகி அலைந்து திரியும் நாய்களுமாக வீதியிலும், சந்தைகள், மருத்துவமனைகள், மற்றும் பொது இடங்களிலும், கிராமங்களிலும் மக்களுக்குக் கடித்து பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பொதுமக்களில் நாளாந்தம் பத்திற்கும் மேற்பட்டவர்கள் நாய்க் கடியால் பாதிக்கின்றனர்.

விசர்நாய்க்கடிக்கு போடும் ஊசிமருந்து இங்கு தட்டுப்பாடாக உள்ளதால் நோயாளர்களை வவுனியா, யாழ்ப்பாணம் அனுப்பவேண்டிய நிலை உள்ளது. சிலர் விசர்நாய்க்கடிக்கு ஆளாகி இறந்தும் உள்ளனர். எனவே பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களைக் கட்டி அல்லது அடைத்து வைப்பதுடன் கழுத்துப்பட்டி அணிவித்துத் தடுப்பு மருந்துகளையும் மிருக வைத்தியரிடம் சென்று போடவேண்டும். கழுத்தில் பட்டி அணியாது அலைந்து திரியும் நாய்கள் கட்டாக்காலி நாய்களாகக் கருதப்பட்டு அழிக்கப்படும், பொதுமக்கள் நலன்கருதி செய் யப்படவிருக்கும் இச்சிறப்பு வேலைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழீழ சுகாதாரசேவைகள் பணிப்பாளர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

# குடாநாட்டில் மீன்பிடித்துறையை மேம்படுத்த ஜப்பான், உ.உ.திட்ட அதிகாரிகள் குழு ஆராய்வு

## -அதிகாரிகளுடனும் ஆலோசனை

(வடமராட்சி)

**யாழ்.குடாநாட்டில் மீன்பிடித்துறையினை வளப்படுத்துவதற்கு ஏதுவாக உதவித்திட்டங்களை நிதி உதவி வழங்கி செயற்படுத்த உலக உணவுத்திட்ட அமைப்பு முன்வந்துள்ளது.**

இவ்வாறன திட்டங்களை அமுல்ப்படுத்துவது பற்றி ஆராய்வதற்கென இலங்கை மற்றும் மாலை தீவுகளுக்கான வதிவிடப் பிரதிநிதி எம்.மக்கூலன் ஜசுவ் மற்றும்திட்டஉதவியாளர் கே.பி. சுகதபால ஆகியோர் குடாநாட் டிற்கு விஜயம் செய்துள்ளனர்.

யாழ்.செயலகத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்த அவர்கள் மேலதிக அரச அதிபர் அ.சிவசாமியினை சந்தித்தப் பேச்சுக்களை நடத்தினார். ஆழ்கடல் மீன்பிடியினை மேம்படுத்தும் வகையிலான படகுத்துறை யொன்றினை நிறுவுதல், பனிக்கட்டி தொழிற்சாலை அமைப்பு, மீனவர்களுக்கான முன்கடன்களை வழங்குதல் மற்றும் மீன்பிடித் தொழிற் பயிற்சி, கடல் வழங்களை ஆய்வு செய்தல் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளன.

இதனிடையே யாழ். குடாநாட்டில் கடற்றொழில் மற்றும் விவசாயத்துறைகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆராய ஜப்பானிய தூதுக்குழுவொன்றும் நேற்று முன்தினம் குடாநாட்டிற்கு விஜயம் செய்தது.

இதேவேளை யாழ். குடாநாட்டிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டு வருகை தந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் உயர் தூதுவராலயத்தின் உயர் மட்ட அதிகாரிகள்குழு அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள பருத்தித்துறை இறங்குதுறையை நேரில் சென்று பார்வையிட்டுள்ளது.

முன்னதாக வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்ககளின் சமாசப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய குழுவினர் பின்னர் கரையோரப்பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர்.

வலிகாமம் வடக்கின் கரையோரப் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மீனவ குடும்பங்கள் வசித்து வரும் வியாபாரி மூலை இடம்பெயர்ந்தோர் முகாமிற்குச் சென்று பிரதிநிதிகள் இடம் பெயர்ந்த மீனவ குடும்பங்களை சந்தித்தனர்.

பின்னர் கடற்றொழிலாளர் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ்.அலுவலக அதிகாரிகள் சகிதம் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் அமைந்துள்ள பருத்தித்துறை இறங்குதுறையினைப் பார்வையிட்டனர். அத்துடன் தற்போது படையினரின் பாவனையில் உள்ளதும் செயலிழந்து போயுள்ளதுமான முனை வெளிச்சவீட்டினை பார்வையிட்ட குழுவினர் பின்னர் கற்கோவளம் கிராமத்திற்கும் விஜயம் செய்திருந்தனர்.

அங்கு கடந்த கால யுத்த அனர்த்தங்களால் செயலிழந்து போயுள்ள கற்கோவளம் ஐஸ் கட்டித்தொழிற்சாலையினையும் அவர்கள் நேரில் பார்வையிட்டனர்.

குறித்த ஐஸ் கட்டித்தொழிற்சாலையினை மீள இயக்கவுதவுமாறு மீனவ சங்கங்கள் பலவும் கோரி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் அ.சிவசாமியினை சந்தித்துப் பேச்சுக்களை நடத்திய அவர்கள் அங்கு கடற்றொழிலாளர்கள் நீரியல் வளத்துறை திணைக்கள யாழ். அலுவலக அதிகாரிகளுடனும் பேச்சுக்களை நடத்தினர்.

குறிப்பாக எதிர்வரும் காலப் பகுதியில் ஜப்பானிய அரசின் உதவியின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள உதவித்திட்டங்களை இனங்காணும் முகமாகவே இவ் விஜயம் இடம் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (27)

# இரவு வேளைகளில் கடற்படையினர் துப்பாக்கிச் சூட்டுப்பயிற்சி

## –கடற்றொழிலாளர் பெரும் அச்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் மற்றும் கொழும்புத்துறை ஆகிய பிரதேசக் கடற்பரப்புக்களில் கடற்படையினர் இரவு நேரங்களில் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது.

திடீரென மேற்கொள்ளப்படும் இத்தகைய சூட்டுப்பயிற்சிகள் காரணமாக கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையிலும் கடற்படையினரால் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகள் அப்பகுதி மக்களின் இயல்பு நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது (33)



தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவில் இலண்டன் ஈலிங் கனகதுர்க்கையம்மன் ஆலய இந்து இளைஞர் பேரவையின் வெளியீடான "வாசலில் ஒளிவீசு" பக்திப்பாடல் இசைத்தட்டு வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் முதற்பிரதியை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் வெளியிட்டு வைக்க வல்லிபுரம் இராசையா பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். (படம்-செல்வா)

# விளைநிலங்களில் காணப்படும் மிதிவெடிகள் அகற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள உரும்பிராய்-மருதனாமடப் பகுதிக்கு அருகாமையிலுள்ள விளை நிலப்பரப்புக்களில் படையினரால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதி வெடிகள் அகற்றப்பட்டு வருகின் றன.

கடந்த கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றப்படாததனால் இவ்வீதிப்பகுதிகளிலுள்ள ஏராளமான ஏக்கர் விளைநிலங்கள் பயிரிடப்படாதிருந்தன.

இதுகுறித்து இப்பகுதி கமக்கார அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து ஹலோ ரெஸ் மிதிவெடிகள் அகற்றும் படையினர் அப்பகுதிகளிலுள்ள மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்களையும் அகற்றிவருகின்றனர். (33)

# திக்கத்தில் மீன் சந்தைப்படுத்தல் நிலையம் நவீன வசதிகளுடன் திறக்க நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதி மீனவர்களுக்கான மீன்சந்தைப்படுத்தும் வசதிகளை மேம்படுத்தும் முகமாக சந்தைப்படுத்தல் நிலையமொன்று திக்கம் பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

உலக உணவுத்திட்ட நிறுவன உதவியுடன் நிறுவப்படவுள்ள இச் சந்தைப்படுத்தல் நிலையத் திற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட மீன்பிடி மற்றும் கடல்வள திணைக்கள உதவிப்பணிப்பாளர் கே.தர்மலிங்கம் நாட்டி வைத்தார்.கடந்த புதன்கிழமை நண்பகல் இடம்பெற்ற இவ் அடிக்கல் நாட்டும் விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலக அதிகாரிகளுடன் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இந்நிலையத்தில் மீன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான குளிரூட்டிகளும் பொருத்தப்படவுள்ளன. (27)

# கட்டட வேலைகளுக்கு தரமற்ற மரங்கள்!

யாழ்.குடா நாட்டில் அரச கட்டடங்கள் பாடசாலைக் கட்டடங்கள் போன்றவற்றைக் கட்டும் கட்டட ஒப்பந்தக்காரர்கள் தரமற்ற கொழும்பில் இருந்து தருவிக்கப்படுகின்ற மரங்களைப் பயன்படுத்துவதாகத் தெரியவருகிறது.அதிகமான இலாபம் பெற வேண்டும் என்பதற்காக அரசாங்கக்கட்டடங்களுக்கு தரமற்ற மரங்கள் கூரைக்கு பயன்படுத்தப்படுகின்றன. இவ் வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய முதலாம் தரமுடைய மரங்களான பாலை, வேம்பு, முதிரை, கம்பஸ் முதலான மரங்கள் இவ்வேலைகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டும் இவற்றுக்கு மாறாக ஒப்பந்தக்காரர்கள் கொழும்பில் இருந்து தரம் குறைந்த அற்றோனியகொறா, ரெட்பயோ, சவுக்கு, சஞ்சிவி போன்ற மரங்களை பயன்படுத்துவதாகத் தெரியவருகின்றது. உதாரணமாக தெல்லிப்பளை உதவி அரசாங்கப்பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற வீட்டுத்திட்டத்தில் தரம் குறைந்த மரங்கள் பயன்படுத்துவது தெரியவருகிறது அதேபோல் உலக வங்கி உதவியுடன் கோயிலாக்கண்டி, மட்டுவில் மத்தியில் கட்டப்பட உள்ள வீடுகளுக்கு இவ்வகைத் தரம் குறைந்த மரங்கள் இறக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

# யாழ்.சிறையில் பெரும் இட நெருக்கடி; மனித உரிமை ஆணைக்குழு பார்வை

(வடமராட்சி)

யாழ்.சிறைச்சாலையில் மோசமாக நிலவிவரும் இட நெருக்கடி தொடர்பாகவும், அடிப்படை வசதிகளின்மை தொடர்பாகவும் சிறைச்சாலை ஆணையாளரது கவனத்திற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் கொண்டு வந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று யாழ்.சிறைச்சாலைக்கு விஜயம் செய்திருந்த மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மூவர்,சிறைச்சாலை நிர்வாகத்துடனும் கைதிகளுடனும் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட இணைப்பாளர் றோஹித பிரியதர்சன "சுமார் 70 கைதிகள் மட்டுமே தடுத்துவைக்கக் கூடிய வசதி உடைய சிறைச்சாலையில் தற்போது இரு நூறிற்கும் அதிகமானோர்ர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இதனால் மோசமான இட நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகவும், பதினைந்தடிக்கு பதினைந்தடி அளவுடைய அறையொன்றினுள் 35 இற்கும் அதிகமான கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் அடிப்படை வசதிகளான குடிநீர், மலசலகூடம் மற்றும் குளியல் வசதிகள் போதிய அளவில் இல்லாதிருப்பதாகவும் அத்துடன் நெருக்கடி காரணமாக நோய் தொற்றலுக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில்யாழ். சிறைச்சாலைக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்குமாறு சிறைச்சாலை ஆணையாளரைத் தாம் கோரியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (27)

# பாலத்தால் ஆபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரிலுள்ள வேம்படிச் சந்தியிலுள்ள பாலம் உடைந்து போன நிலையில் நீண்டகாலமாகக் காணப்படுகின்ற போதும் அதனைப் புனரமைப்புச் செய்ய யாழ். மாநகரசபையினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இதனால் இப்பகுதிகளில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

PUBLIC LIBRARY JAFFNA

# கோயிலாக்கண்டியில் இராணுவம் இறால், மீன்களைக் களவாடுகிறது

## மீனவர் சங்கம் குற்றச்சாட்டு

(வடமராட்சி)

தென்மராட்சியின் கோயிலாக்கண்டிப் பகுதிகளில் மீனவர்களால் பிடிக்கப்படும் மீன் இறால்களை இராணுவத்தினர் களவாடி வருவதாக அப்பகுதி மீனவ சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆழங்குறைந்த இக்கடற்பகுதியில் இரவுவேளைகளில் மீன்பிடியில் ஈடுபட மீனவர்களுக்குப் படையினர் 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் தடை விதித்துள்ளனர்.இந்நிலையில், மாலை வேளைகளில், கடற்பகுதியில் வலைகளை வீசிவிடும் மீனவர்கள் அடுத்த நாள் காலை வேளைகளில் பிடிபடும் இறால்களை சேகரித்து வருகின்றனர். இவ்வாறு வலைகளில் பிடிபடும் இறால் மீன்களையே அருகிலுள்ள இராணுவ காவலரண்களைச் சேர்ந்த படையினர் களவாடி வருகின்றனர்.

இதனிடையே கோயிலாக்கண்டி கடற்கரை முதல் கிழக்கு அரியாலையின் முனைவரை படையினரால் அமைக்கப்பட்டுள்ள முட்கம்பி வேலிகளுக்கப்பால் மீன்பிடிக்கச் செல்லத் தொடர்ந்தும் படைத்தரப்பு அனுமதி மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# கொடிகாமம் அரச மத்திய மருந்தகத்தை வைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டுகை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலுள்ள அரசினர் மருந்தகத்தினை வைத்தியசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏராளமான மக்கள் வாழும் கொடிகாமம் பிரதேசத்தில் உள்ள அரசினர் மருந்தகம் அப்பகுதி மக்களின் வைத்தியதேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் அடிப்படை வசதிகளுடன் காணப்படவில்லை.

இதனால் இப்பகுதி மக்கள் தமது அவசரவைத்திய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பல மைல்கள் தொலைவிலுள்ள யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் கொடிகாம பிரதேச வாழ் மக்கள் துன்பங்களைக் கவனத்தில் கொண்டே மேற்படி கோரிக்கையை கொடிகாமப் பிரதேச மக்களாலும் மக்கள் அமைப்புக்களாலும் விடுக்கப்பட்டு வருகிறது. (33)

# தனிநாயகம் அடிகளார்

இவர் ஊர்காவற்றுறையில் கரம்பன் என்னும் இடத்தில் 1913 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2 ஆம் திகதி பிறந்தார். இவரின் இளமைப் பெயர் சேவியர். ஊர்காவற்றுறையிலும் யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும் கல்வி கற்றார்.



குருவானவராகச் சேர்ந்து கொழும்பிலும், உரோமாபுரியிலும் சமயக் கல்வியைக் கற்றுத் தேறினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்றார்.

தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது "தனிநாயகம்" எனப் பெயர் புனைந்துகொண்டார்.

தமிழறிவும், தமிழ்ப் பற்றும் நிரம்பியவராய் பிற நாடுகளுக்குச் சென்று தமிழின் சிறப்புகள் பற்றி உரைகள் நிகழ்த்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். மலேசியப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பேராசிரியராகப் பணிபுரிந்தார். தமிழ்த்தூது "ஒன்றே உலகம்" என்ற தமிழ் நூல்களையும் சில ஆங்கில நூல்களையும் எழுதினார். நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதினார். தமிழாராய்ச்சி மாநாட்டு சிற்பி இவரே.

உரோமாபுரியில் உயர்கல்வி கற்றபோது வீரமாமுனிவர் கழகத்தை நிறுவி அதன் மூலம் தமிழோசை பரவச் செய்தார். பரந்த உலக மனப்பான்மையும், குறையாத மொழிப்பற்றும் உள்ளவர். இன,மத, மொழிவேறுபாடுகளின்றி தமிழையும், தமிழர் பண்பாடுகளையும் உலகறியச் செய்தவர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது அவருடைய கொள்கையாகும். இவர் உரோமாபுரியில் கற்கும் போது பிரெஞ்சு, கிஸ்பானியம், ஜேர்மன், ஆங்கிலம், கிரேக்கம், சமஸ்கிருதம், போர்த்துக்கேயம், உருசியம், மலாய் எனப் பல மொழிகளையும் கற்றுத்தேர்ச்சிபெற்றார். 1950 ஆம் ஆண்டு வெளிநாடுகளுக்கு ஒரு கல்விச்சுற்றுலா சென்றபோது அந்த நாட்டு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க "Tamil" என்ற ஆங்கில சஞ்சிகை ஒன்றை வெளியிட்டார். இவர் 1980 இல் இறையடி சேர்ந்தார்.

# 10 மாத ஆண் குழந்தையின் வயிற்றுக்குள் ஒரு குழந்தை

10 மாத ஆண் குழந்தையின் வயிற்றுக்குள் ஒருகுழந்தை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மராட்டிய மாநிலம் கோலாப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதிகள் வரதா, லாகு கூலித் தொழிலாளிகளான இவர்களுக்கு 10 மாதத்துக்கு முன்பு அழகான ஆண்குழந்தை ஒன்று பிறந்தது. அதற்கு மயூர் என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர். குழந்தை வளரவளர அதன் அடிவயிறு வீங்கிக் கொண்டே வந்தது. என்ன காரணம் என்று புரியாத பெற்றோர்கள் அதை கங்கன்பவடா நகரில் ஒரு மருத்துவமனைக்குக் கொண்டு போய் காட்டினார்கள். குழந்தையை ஸ்கேன் மூலம் பரிசோதித்த டாக்டர் கிஷோர், குழந்தையின் வயிற்றுக்குள் கருப்பை ஒன்று இருப்பதையும், அதனுள் நன்கு வளர்ந்த கரு இருப்பதையும் கண்டறிந்தார். அதை உடனடியாக ஆபரேஷன் மூலம் அகற்ற முடிவு செய்தார். அதன்படி ஆபரேஷன் செய்து அந்தக் கருப்பை அகற்றப்பட்டது. அதனுள் தலை, கண், மூக்கு, கைகள் உருவான நிலையில் ஒரு குழந்தை இருந்தது. ஆனால் அதற்கு உயிர் இல்லை. ஆபரேஷனுக்கு பிறகு குழந்தை மயூர் குணம் அடைந்து வருகிறது. மருத்துவ வரலாற்றில் இது அபூர்வ சம்பவமாகக் கருதப்படுகிறது. லாகு கர்ப்பம் தரித்தபோது 2கருக்கள் உருவாகி அதில் ஒரு கரு அடுத்த கருவுக்குள் சங்கமமாகிவிட்டதால் இது நடந்திருக்கலாம் என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.




ஜப்பானின் சொனி நிறுவனப் பணியாளர் ஒருவர் டிஜிரல் போட்டோக்களை பிரிண்ட் செய்து தொகுத்து வெளியிடும் மின்சார பிரிண்டர் ஒன்றை காண்பிக்கிறார். டிஜிரல் கமிரா வில் இருந்து நேரடியாக போட்டோக்களை அச்சிடும் இச்சாதனம் பிரின்டரின் விலை 25000 யென்களாகவும் கமிராவின் விலை 60000 யென்களாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

# சந்தனமரம் பற்றி

வீட்டுச் சுபகாரியங்களின் போதும் கலை நிகழ்வுகளின் போதும் சந்தனம் அளித்துப் பன்னீர் தெளித்து வரவேற்கிறோம். இச் சந்தனமரம் பற்றி சற்று நோக்குவோம். சந்தன மரத்தின் ஒவ்வாத பகுதியும் ஒப்பில்லாத பயனை அளிக்க வல்லது. சந்தன மரத்தின் வைரம் பாய்ந்த கட்டைகள் சிற்பவேலைப்பாடுகளுக்குப் (Sandal Wood Carving) பெரிதும் பயன்படுகின்றன. யானையின் தந்தத்தினால் (Tusk) செய்யப்படும் சிற்பவேலைப்பாடுகளுக்கு அடுத்தபடியாக சந்தன மரவேலைப்பாடுகள் உலகப் புகழ்பெற்றவை. நறுமணம் வீசி மனதைக் கவரும் சிற்பவேலைப்பாடுகளுக்கும் சிறந்த இடமாக மைசூர் திகழ்கிறது. இதன் சிறப்பு என்னவென்னில் சந்தனத்தைப் பூச்சிகள் அணுகா, சந்தனப்பேழைகளில் துணிகளைவைத்தால் துணிகள் மணம் பெறுவதோடு மட்டுமன்றி பூச்சிகளினால் பாதிப்புறுவதில்லை. சந்தனக் கட்டை காற்றுவெப்பத்தினால் உலர்ந்து விடுகிறது. உலர்ந்த பின் அதனைத் தேய்த்தால் மறுபடியும் மணம் வீசும் அரைக்க அரைக்க சந்தனக் கட்டையில் வாசம் உண்டாகும். இதை விலை மதிப்புள்ள சந்தன எண்ணெய். சந்தன மரத்தின் வேர்ப் பகுதிகளில் 6.25 சதவீதமும் கட்டை வைரப்பகுதிகளில் 4.05 சதவீதமும் காணப்படுகிறது. இம்மரத்தின் கழிவுதான் சந்தன எண்ணெய். சந்தன எண்ணெய்க்கு நறுமணம் தருவது ஸாண்டலால் (Santalol) என்னும் பொருள் இது 60 சதவீதம் எண்ணெயிலுள்ளது. சந்தன எண்ணெயின் தரம் ஸாண்டலாலின் அளவைப் பொறுத்தது. இதனைத் தவிர ஸான்பீன் (Sandil) ஸான்டலின்ஸ், டெரிஸான்டலால் போன்ற வேறு சிலசத்துப் பொருள்களும் உள்ளன.

சந்தன எண்ணெய்யில் 80 சதவீதம் சோப் தயாரிக்கவும், 10 சதவீதம் நறுமணத்திரவியங்கள் தயாரிக்கவும், 10 சதவீதம் மருத்துவத்திற்கும் பயன்படுகின்றது. சந்தன எண்ணெய் வடிக்கும் முறையில் வேர்களில் இருந்தும், கட்டைப்பகுதிகளில் இருந்தும் எடுக்கப்படுகின்றன. எண்ணெய் வடித்த சக்கை ஊதுபத்தி செய்யப் பயன்படுகிறது. சந்தனம் பல மருத்துவப் பயன்களை அளிக்கின்றது. கோடை காலத்தில் சந்தனத்தை அரைத்துப் பூசினால் உடலில் குளிர்ச்சி உண்டாகும். இதனால் வியர்க்குரு, வேணல் கட்டிகள் முதலியன ஏற்படாது. நாட்டில் சொத்தெனக் கருதப்படும் சந்தன மரக்கட்டையை யாரும் சரியான உரிமம் இல்லாமல் ஐந்து கிலோவிற்குக் கூடுதலாக வைத்திருக்கவோ வெட்டவோ கூடாதென்று இந்தியாவில் சட்டமும் உள்ளது.



• ஜப்பானின் "நூவோ" ரோபோ 36 சென்ரிமீற்றர் உயரமும் 2.5 கிலோக்கிராம் நிறையும் கொண்ட இது "மொனபல்" தொலைபேசியாலும் பேச்சு அடையாளத்தாலும் தூரக்கட்டுப்பாட்டுக் கருவியின் மூலமும் இயக்கப்படுவது இதன் சிறப்பியல்பாகும். கல்லூரிகள், ஆராய்ச்சி நிறுவனங்கள் தோல்பொருள் நிலையங்கள் என்பவற்றில் இந்த ரோபோவை கம்பனி விற்கத் தொடங்கியுள்ளது. இதன் விலை மூன்று மில்லியன் யென்களாகும்.

# இறப்பதற்கு முன் போரில்லா உலகத்தை காண ஆசைப்படுகிறார் ஏ.கே 47 இன் தந்தை


இறப்பதற்கு முன்னர் போரில்லாத ஒரு சமூகத்தில் வாழ வேண்டும் என்பதே தனது ஒரே விருப்பம் என்கிறார் உலகின் மிக முக்கியமான, அதிகளவு பயன்பாட்டில் உள்ள துப்பாக்கியுமான AK 47 ஐக் கண்டுபிடித்த கலாஷினி கோவ்.

அரசியல்வாதிகள் தமது பிரச்சினைகளை சமாதான வழியில் தீர்க்கப்பழகுகின்ற வகையில், உலகில் சமாதானத்தின் பரவலையே நான் விட்டுச் செல்வதாக இருக்க வேண்டும் என்று கூறும் கலாஷினி கோவிற்கு இப்போது வயது 84. தற்போது உலகில் போர் நடைபெறுகின்ற இடங்களிலெல்லாம் அதிகளவு AK47 பரவிக்காணப்படுகின்ற போது தனது கண்டுபிடிப்பைத் தான் ஒரு போதும் ஒருகொலை இயந்திரமாகப் பார்த்ததில்லை என்றும், சமாதானத்தின் கருவியாகவே அதனைக் கருதியதாகவும் கலாஷினி கோவ் தெரிவிக்கிறார்.

AK47 கண்டுபிடிக்கப்பட்டு ஏறக்குறைய 6 தசாப்த காலமாகிறது. (Automatic Kalashnikov 1947)-என்பதன் சுருக்கமே AK 47, 1947 இலேயே இந்தத் துப்பாக்கி கலாஷினி கோவால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆயுதத்தை ஜேர்மனிக்காகவும், போருக்காககவுமே நான் உருவாக்கினேன். நான் அப்போது ஒரு படைவீரனாக இருந்தேன். படையினருக்கு அன்று மிக இலகுவான நம்பகரமான ஒரு ஆயுதம் தேவைப்பட்டது என்று கூறும் கலாஷினி கோவ், AK47 பயன்படுத்தப்படும் போர்களுக்கெல்லாம் தனது கண்டுபிடிப்பான அந்தத் துப்பாக்கியே காரணம் என்று கூறப்படுவதை நிராகரிக்கிறார்.

ஒருபோரை தனித் துப்பாக்கியே தொடக்குவதில்லை, நவீன போரில் அனைத்து விதமான ஆயுதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அதற்காக அந்த ஆயுதத்திற்கும், போரிற்கும் தொடர்பு இருக்கின்றது என்று கூறமுடியாது என்று கலாஷினி கோவ் தெரிவித்துள்ளார்.

AK 47 ஏனைய துப்பாக்கிகளை விட மிகக் கச்சிதமான ஒன்றாக இருக்கிறது. முதன் முதலாக உருவாக்கப்பட்ட போது இருந்ததைவிட தற்போது பாரம் குறைந்ததாக, எளிமையானதாக கொஞ்சம் மாறியுள்ளது. ஏனைய துப்பாக்கிகளைப் போலல்லாது AK 47 மண், நீர், சேறு என எவற்றாலும் பாதிப்படையாதது. குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியது. அத்தோடு இதன் அளவு காரணமாக ஏனைய துப்பாக்கிகளை விட கடத்துவது இலகுவாக உள்ளது. உலகில் அதிகளவு காணப்படும் இவ்வாயுதம் இதுவரை 50 மில்லியனுக்கு மேலாக விற்பனையாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



"ரோபோ சபீன்" வேகமாக நகரும் ரோபோவாகும். இந்த வருடம் சர்வதேச சந்தைகளில் கிடைக்கக் கூடியதாக இக் கருவி தற்போது விருத்தி செய்யப்படுகின்றது. 1982இல் பீற்றர், றிச்சர்ட், யனோவ்ஸ்கி என்ற இரு சகோதரர்களால் கண்டு பிடிக்கபபட்டது இந்த ரோபோ. உயர் தொழிலநுட்பமான உயிரோட்டமுள்ள சாதனம் *சுறுசுறுப்பான பல் வேகநடை, ஓட்டம் மற்றும் திரும்பல் வேகமாகத் தள்ளும் திறன் கொண்ட கைபிடி போன்ற சாதனம் பொறுக்குதல், எறிதல், உதைதல், கூட்டுதல்,நடனமாடுதல், விசையுடன் தள்ளுதல், தட்டுதல் மற்றும் ஆறு வித்தியாசமான குங்-பூ நகர்வுகள் உட்பட 37 நிகழ்ச்சி முன்னேற்பாட்டினை மேற் கொள்ளக்கூடியது.

84 வரையான நிகழ்ச்சிப் படிமுறைகள் நான்கு மாதிரிகளுடன் செயற்படுதல் கணினிப்பொறியினாலன்றி அனைத்து செயல்களும் தூரக்கட்டுப்பாட்டுக்கருவி மூலம் இயங்குவது உட்பட பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டது. இந்த றோபோ சபீன்.

# இரத்தப் பெருக்கும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்

### இரத்தப்பெருக்கு/குருதி ஒழுக்கு

ஒருவருடைய உடலில் 5.5 லீற்றர் தொடக்கம் 6லீற்றர் வரையான குருதி உண்டு. இதயம் சுருங்கி விரிவடைகின்ற செயற்பாட்டால் இக் குருதியானது இதயத்திலிருந்து உடலின் எல்லாப் பாகங்களையும் சென்றடைகின்றது. இதயமானது ஒரு நிமிடத்தில் 70 தொடக்கம் 80 தடவைகள் சுருங்கி விரிகின்றது. இவ்வாறு சுருங்கி விரிவதை மணிக்கட்டின் நாடித் துடிப்பில் அவதானிக்கமுடியும். சாதாரணமாக உடலில் காயம் ஏற்படும்போது குருதி உறைவதன் மூலம் குருதி ஒழுக்கு கட்டுப்படுத்தப்படும். குருதி உறைவதற்கு 2.5 நிமிடங்கள் வரை எடுக்கும். தொடர்ச்சியாகக் குருதி ஒழுகினால் குருதியுறைதல் தாமதமாகலாம். குருதி ஒழுக்கானது உடலின் வெளிப்புறமாகவோ அல்லது உட்புறமாகவோ நிகழலாம். பொதுவாக வெளிப்புறமான குருதி ஒழுக்கைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வோம்.

★காயத்தின் இரு பாகங்களையும் இறுக்கிப்பிடிக்க வேண்டும். அதாவது காயம் ஏற்பட்ட இடத்தின் மேற்பகுதியையும் கீழ்ப்பகுதியையும் அழுத்திப் பிடிக்கவேண்டும்.

★கை,கால்களில் காயம் ஏற்பட்டிருந்தால் குருதி ஒழுகும் பாகத்தை உயர்த்திவைக்க வேண்டும்

★காயப்பகுதியில் குருதி உறைந்திருந்தால் (கட்டிபட்டிருந்தால்)அதனைத் துடைக்க வேண்டாம

★தொடர்ந்து குருதி ஒழுகினால் முதலில் கட்டிய துணியை அகற்றாது அதன் மேல் அணியத்தை வைத்துக் கட்டவும்.

★தொடர்ந்து குருதி ஒழுகினால் நாடியை அதன் கீழ் உள்ள எலும்புடன் அழுத்தி இரத்தப் பெருக்கைக் கட்டுப்படுத்தலாம்.

### மூக்கில் இருந்து குருதி ஒழுக்கு

இது மூக்கில் காயம் ஏற்படுவதாலோ அல்லது பீனிசம், குருதி அமுக்கம் போன்ற நோய்களினாலோ பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ்வகையான குருதி ஒழுக்கு ஏற்படலாம்.

இதற்குப் பின்வரும் முறைகளைப் பயன்படுத்திக் குருதிப் பெருக்கைக் கட்டுப்படுத்தலாம்.

★நோயாளியைக் காற்றோட்டம் உள்ள இடத்தில் இருத்தி தலையைப் பின்புறமாக சாய்த்து விட வேண்டும்.

★நோயாளி மூக்கினால் சுவாசிப்பதை நிறுத்தி வாயால் சுவாசிக்கவேண்டும்.

★மூக்கின் கடினப்பாகத்தை இறுக்கிப்பிடிக்கவேண்டும்.

★மூக்கை சிந்துவதற்கு இடம் கொடுக்கவேண்டாம்.

★மூக்கில் இருந்து குருதிப் பெருக்கு ஏற்படும் ஒருவரிற்கு இவ்வாறான சிகிச்சைமுறைகளை பயன்படுத்தி குருதி ஒழுக்கைக் கட்டுப்படுத்தலாம்.

### பற்குழியில் இருந்து குருதி ஒழுக்கு

பெரும்பாலும் ஒருவருக்கு பல் அகற்றிய பின்னரே இத்தகைய குருதி ஒழுக்கு ஏற்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில்,

★குளிர்ந்த நீரால் அல்லது உப்பு நீரால் வாயைக் கழுவ வேண்டும்.

★பற்குழியைப் பஞ்சினால் அடைத்து அதன் மேல் ஒரு மடித்த துணியை வைத்து பல்லால் கடிக்கச் செய்ய வேண்டும்.

★வாய்ப்பகுதியில் காயம் ஏற்பட்டு பற்கள் தாக்கப்பட்டாலோ அல்லது பல்முரசுப்பகுதி கரைவடைவதாலோ பற்குழியிலிருந்து குருதி ஒழுக்கு ஏற்படலாம். இதற்குக் குளிர்ந்த நீரால் அல்லது உப்பு நீரால் வாயைக் கொப்பளிப்பதன் ஊடாகவும் காயம் ஏற்பட்ட பகுதியின் மேல் மடித்த துணியினை வைத்து அதனைக் கடித்துப் பிடிக்கும்படி செய்தும் இவ்வகையான குருதிப் பெருக்கைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு பற்குழியிலிருந்து குருதி ஒழுகுவதை நாம் கட்டுப்படுத்தலாம்.

### உள்ளங்கையில் இருந்து குருதி ஒழுக்கு

★கூரிய ஆயுதங்களினால் ஏற்படும் வெட்டுக் காயங்களினால் உள்ளங்கையில் இருந்து பெரும்பாலும் குருதி ஒழுக்கு ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் மணிக்கட்டை இறுக்கிப் பிடிக்கவேண்டும்.

★ஒரு காயக்கட்டை உள்ளங்கையில் வைத்து நோயாளியைப் பிடிக்கச் சொல்லிக் கட்டும் துணியால் கட்டவேண்டும்.

★கையை உயர்த்தித் தொங்கும் வகையில் தொங்கும் கட்டில் கட்டவேண்டும்.

### மார்பில் ஏற்படும் குருதி ஒழுக்கு

★துப்பாக்கிச்சூட்டுக் காயங்களினாலும், குத்துக்காயங்களினாலும் தான் அதிகமாக மார்பில் குருதி ஒழுக்கு ஏற்படுகின்றது. இவ்வாறான நிலைகளில் நுரையீரல் பகுதி தாக்கப்படுவதற்கும் அதிக வாய்ப்பு உள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உதடுகள், நகங்கள் நீலநிற மடைதல்

★மூச்சு உள்ளெடுக்கும் போது காற்று உட்புகும் சத்தம் கேட்கும்.

★மூச்சுவெளியிடும்போது குருதி நுரைத்துக்கொண்டு வெளியேறும்.

**சி. ஜெயதீபன்**
(திருவையாறு)
பயிற்சி ஆசிரியர்
சென் ஜோன்ஸ்
முதலுதவிப் படையணி.

★இருமும் போதும் குருதி வெளியேறும்.

★போன்ற அறிகுறிகளை அவதானிக்கலாம். இதற்கான சிகிச்சைகளாக

★உடனடியாகக் கையால் மார்பில் காணப்படும் துவாரத்தைக் காற்று உட்புகாவண்ணம் அழுத்திப் பிடித்துக்கொண்டு காயக்கட்டை வைத்துக்கட்டவேண்டும். இவ்வாறு கட்டும்போது பாதிக்கப்பட்டவர் மூச்சை வெளிவிடும் போதுதான் காயக்கட்டைக் கட்டவேண்டும்.

### உள்ளுறுப்புக்களில் இருந்து குருதி ஒழுக்கு

வெளி உறுப்புக்களில் ஏற்படும் குருதி ஒழுக்கினைப் போன்றே உள்ளுறுப்புக்களில் ஏற்படும் குருதி ஒழுக்கினைப் பார்த்து அளவிட முடியாது. ஆனால் கீழ்க்குறிப்பிடும் அறிகுறிகளைப் பொறுத்து வெளியேறிய இரத்த அளவை அளவிடலாம்

அறிகுறிகள்:-

10 வீதமான உள்ளக குருதி ஒழுக்கிற்கு எந்தவித அறிகுறியும் தென்படமாட்டாது.

சுமார் 30 தொடக்கம் 40 வீதம் வரையான குருதி ஒழுக் கிற்குப் பின்வருமாறு அறிகுறிகள் தென்படும்.

★தலைசுற்றல்
★வியர்வை உண்டாதல்
★முகம், உதடு வெளுத்துப்போதல்

★நாடித்துடிப்பும், சுவாசித்தலும் அதிகரிக்கும். 40 வீதத்திற்கு மேற்பட்ட குருதி ஒழுக்கிற்கு:- கைகால் குளிர்ந்து போதல், நாடித்துடிப்பு ஆழமானதாகவும், பலவீனமானதாகவும் இருக்கும்.

★மூச்சுவிட கஷ்டப்படுவதுடன், தாகம் அதிகரிக்கும். இவ்வாறான அறிகுறிகளை வைத்து உள்ளகக் குருதிப் பெருக்கின் தாக்கத்தை இனங்கண்டு கொள்ளலாம். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

★இந்தப் பெருக்கினால் தான் கூடுதலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறு நாம் இரத்தப் பெருக்கினைக் கட்டுப்படுத்திப் பாதிக்கப்பட்டவருக்கு சிகிச்சை அளிப்போமானால் உயிரிழப்புக்களை வெகுவாகக் குறைக்கலாம்.

## இ.நி.சபையை ஏற்படுத்த அரசை வலியுறுத்துமாறு சர்வதேச நாடுகளிடம் த.கூட்டமைப்பு கோரும்

—பா. உறுப்பினர் மாவை. சேனாதிராஜா

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தையும், எதிர்க் கட்சியையும் வலியுறுத்துமாறு சர்வதேச நாடுகளிடம் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு கோரவுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே, இடைக்கால நிர்வாக சபை குறித்த கோரிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகளும், தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பும், தமிழ் மக்களும் வலியுறுத்தி வருவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா இவ்விடயம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். கடந்த மாத நடுப்பகுதியில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சந்தித்தபோது இடைக்கால நிர்வாக சபையை முன்நிலைப்படுத்தியே சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுமென உறுதியளித்திருந்தார். ஆனாலும் இச்சந்திப்பிற்கு இரண்டு தினங்களுக்குப் பின்னர் நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில் சனாதிபதி சந்திரிகா இதற்கு எதிர்மாறான கருத்தை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. இதேவேளை மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்போது இடைக்கால நிர்வாக சபை குறித்த விடயத்தை பேச்சுக்களுக்கான அட்டவணையில் முதல் அம்சமாக இணைப்பதற்கு அரசிடம் அழுத்தம் கொடுக்கும் நகர்வுகளையும் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு முன்னெடுக்குமென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட பொலிஸ்காரர்களுக்குப் பதவி உயர்வு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் சென்ற புதன் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட இரு பொலிசாருக்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தலைமை இன்ஸ்பெக்டரான ஏக்கநாயக்க உதவி பொலிஸ் அத்தியட்சகராகவும், சார்ஜன்ட் சரத்சந்திர ஆட்டிகல சப்-இன்ஸ்பெக்டராகவும் பதவி உயர்த்தப்பட்டனர்.

இவர்களுக்கான "இறப்பிற்குப் பின்னான" இப்பதவியுயர்வுகளை பொலிஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா நேற்று முன்தினம் (வியாழன்) வழங்கியுள்ளார்.

## இராணுவப் பொருட்களுடன் இருவர் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

இராணுவப் பொருட்களை நாட்டுக்குள் கடத்திவர முயன்ற இரண்டு நபர்களை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் (வியாழன்) ஆயிரத்திற்கும் மேற்பட்ட குறிபார்க்கும் கருவிகளையும் 50 இராணுவச் சப்பாத்துக்களையும் எடுத்து வந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த பதினைந்து வருடங்களுக்கு முன் வெளிநாட்டிற்குச் சென்றிருந்த இவர்கள் பிராங் போட்டில் இருந்து எமிரேற்ஸ் விமானமொன்றில் வந்திறங்கிய போதே சுங்கப்பகுதியினரால் கைதாகியுள்ளனர்.

## வவு. கொல்லர் புளியங்குள மக்களுக்கான அபி.திட்டத்தை த.பு.கழகம் செயற்படுத்தும்

(வவுனியா)

வவுனியா கொல்லர் புளியங்குள மக்களுக்கு நிக்கொட் திட்டத்தின் கிராம அபிவிருத்தித் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படுத்தவுள்ளது.

இக்கிராமம் வவுனியா நகரிலிருந்து 35 மைல் தொலைவில் ஏ-9 பாதையில் உள்ளது. இங்கு 65 குடும்பங்களுக்கு மேல் குடியமர்ந்துள்ளனர். அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும், முதன்மைத் தேவைகளையும் இனங்கண்டு பூர்த்தி செய்வதற்கான தேவைகள் கிராமத்திலே இனங்காணப்பட்டன.

பொதுக்கட்டடம், பொதுக்கிணறு அமைத்தல் முன்பள்ளிக் கட்டடம் சுயதொழில் வாய்ப்பு, கடன் பெறல் மலசலகூடம் அமைத்தல், குளம் திருத்தல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சந்தைப்படுத்தல் வசதி, உள்வீதித்திருத்தம், பாடசாலைக் கட்டடம் அமைத்தல், நிரந்தரவீடு அமைக்க வேண்டிய தேவைகளை முதன்மையடிப்படையில், வரிசையாக வந்து மக்கள் வாக்களித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை வவுனியா பன்றிக்கெய்தகுளம் மக்களின் தேவைகளை இனங்கண்டு நிக்கொட் திட்டத்தின் மூலம் கிராம அபிவிருத்தித் திட்டத்தை வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் செயற்படுத்தவுள்ளது.

இதற்கான தேவைகளை இனங்காணும் நிகழ்வில் 60 இற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்துகொண்டு அவர்களின் தேவைகளை முதன்மைப்படுத்தினர்.

முன்பள்ளி அமைத்தல், மலசலகூடம் அமைத்தல், பாதுகாப்பு அரண் அகற்றுதல், ஆலய புனரமைப்பு, உபதபாலகம் கிணறுகள் புனரமைத்தல், பொது நூலகம், வீதி அமைத்தல் ப.நோ.கூ.சங்க கிளை அமைத்தல் என்பன தங்களுக்குத் தேவையாகவுள்ளதாக முதன்மைப்படுத்தியுள்ளனர்.

## திருமலையில் கொரிய டாக்டரின் மர்ம மரணம் குறித்து விசாரணை

(திருகோணமலை)

திருகோணமலை-கப்பல் துறையில் அமைந்துள்ள மாவட்ட ஆயுர்வேத மருத்துவமனையில் இலவச வைத்தியசிகிச்சை அளித்து வந்த கொரியநாட்டு டாக்டர்கள் குழுவைச் சேர்ந்த டாக்டர் சங்கோலி திடீரென்று காலமானார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

35வயதான இவர், கடந்த புதன்கிழமை இரவு நித்திரைக்குச் சென்றார் என்றும், வியாழக்கிழமை காலை 8.30மணியளவில் அவரின் அறைக்குச் சென்ற பணியாளர்கள் அவர் படுக்கையில் அசைவற்ற நிலையில் கிடக்கக் கண்டனர் என்றும் திருமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. அலஸ்கார்டன் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

உடனடியாக டாக்டர் சங்கோலி திருகோணமலை வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டார். அனுமதிக்கப்பட்ட போது அவர் இறந்து விட்டதாக வைத்தியசாலை டாக்டர்கள் தெரிவித்தனர். அவரின் மரணம் குறித்து நீதிவிசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.(25)

கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற

## உயர்திரு கந்தையா சரவணபவன்

(பிரதிக் கல்விப் பணிப்பாளர், முல்லைக் கல்வி வலயம்)
அவர்களின்

### "சேவைநலன் பாராட்டு விழா"

**காலம்:- 11.07.2004, ஞாயிற்றுக்கிழமை, பி.ப3.00மணி.**

**இடம்:-முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய மண்டபம**

தங்களையும் இப் பாராட்டு விழாவில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்,
பழைய மாணவர் சங்கம், முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் (சி9140)

---

வீரவணக்கம்

## 03 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் | தாயக மண்ணில்

27 □ 07 □ 1969



10 □ 07 □ 2001

தமிழீழ தேசியத்துணைப்படை வீரர்

### சி. இராசேந்திரம்

நி.மு:- யாழ்.மாவட்டம்
த.மு:- தணிகைமாறன் குடியிருப்பு தேராவில், விசுவமடு.

மணலாற்றுப் பகுதியில் 10.07.2001 அன்று சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரர்களுக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"* (4782)

---

## பங்குச் சந்தை பெரும் வீழ்ச்சி

கொழும்பில் கடந்த புதன் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தை அடுத்து இலங்கை யின் பங்குச் சந்தையில் பெரும் வீழ்ச்சியடைந்தாக பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பங்குச் சந்தையில் பங்குகளின் பெறுமதி 30 வீதத்தினால் உடனடியாகவே வீழ்ச்சியடைந்ததாக அவை மேலும் குறிப்பிட்டுள்ளன. இதேவேளை, இந்தச் சம்பவத்தினால் சிறிலங்காவில் முதலீடுகளைச் செய்வதற்கு வெளிநாட்டவர்கள் அஞ்சுவார்கள் என்று தெரிவித்துள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர், உல்லாசப் பயணிகளின் வரவையும் இது வெகுவாகப் பாதிக்கும் என்றும் கூறியுள்ளார். இந்நிலைமையை உணர்ந்து அரசியல் தலைவர்கள் சரியான முடிவுகளை எடுக்காவிட்டால், நாட்டின் பொருளாதாரத்தை இது மேலும் பாதிப்புக்களுக்குள்ளாக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

## அரசே பொறுப்பு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி குண்டு வெடிப்பிற்கும் அதனால் எழுந்த இழப்புக்கள்,சேதங்களுக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் கூறியுள்ளார்.

இரண்டு வருட ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் நாட்டின் தலைநகரில் தற்கொலைக் குண்டுவெடிப்புக்கள் நடக்கவில்லை. ஆனால் தற்போதைய அரசு பதவியேற்று மூன்று மாத காலத்தில் கொழும்பு கொள்ளுப் பிட்டியில் நேற்றுமுன் தினம் குண்டு வெடிப்பு நடந்துள்ளது. இதில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டதோடு மேலும பொதுமக்களும், பொலிசாரும் படுகாயமடைந்துள்ளனர். ஆகவே அரசாங்கம் இந்தப் படுகொலைகளுக்கு முக்கிய பொறுப்புக் களை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும், தற்பொழுது நாட்டு மக்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக உள்ளதெனவும் ஐக்கிய தேசியக் கட்சி செயலர் தெரிவித்துள்ளார்.

---

## தச்சு, மேசன் வேலைக்கான கேள்வி கோரல் விண்ணப்பம்

மேற்படி எமது சங்கம் மேற்கொண்டுவரும் ஒப்பந்த வேலைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான தச்சு,மேசன் கூலியாட்களை இணைக்கும் வகையில் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. சம்பந்தப்பட்ட துறையில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

02. கூலியாட்களுக்கான கேள்வி விண்ணப்பத்தினை எம்மிடம் பெற்று, பொதுமுகாமையாளர், பூநகரி, ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலிலோ, நேரடி யாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. விண்ணப்ப முடிவுத் திகதி :- 20.07.2004

கூட்டுறவுச்சேவையிலுள்ள திரு.ந. பாலசுப்பிரமணியம்,
பொதுமுகாமையாளர்,
பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
நாகதேவன்துறை வீதி,
வாடியடி,
பூநகரி. (சி.9749)

---

## பணிநிலை வேண்டுகை

வெளிக்களப் பணியாளர் பணிநிலைக்குத் தகுதியான வர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை:- ஆண்டு 9இற்கு மேல் கல்வி கற்றவராக இருத்தல் வேண்டும்.
02. நல்ல உடல் ஆரோக்கியமுள்ளவராகஇருத்தல் வேண்டும்.
03. அகவை:- 20தொடக்கம் 30 வரை

**குறிப்பு:-**

01. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
02. விண்ணப்ப முடிவுநாள் - 20.07.2004
03. நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:- 22.07.2004 காலை 9.00 மணி.
04. நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:-
மனிதவள மேம்பாட்டுப் பகுதி
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
05. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி
நிதித்துறை,
நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
06. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழுடன் பாடசாலையில் கல்விகற்ற சான்றிதழுடனும் வருகை தரவும்.
07. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி.

(சி-9750)

---

## பணிநிலை வேண்டுகை

எமது பகுதிகளில் நீண்டகாலமாக உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் 'எஸ்.எம்.எஸ். என்ஜினியர்ஸ்' நிறுவனம் கீழ்வரும் பணிநிலைகளுக்கான வேண்டுகைகளைக் கோருகின்றது.

**பணிநிலை - I**

பதவி - குடிசார் பொறியியலாளர்.
தகைமை-விஞ்ஞானமாணி பொறியியலாளர் அல்லது அதற்குச்சமமான தராதரம்.
சம்பளம்-நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பணிநிலை - II**

பதவி- தொழில்நுட்ப அலுவலர்.
தகைமை-தொழில்நுட்பக்கல்லூரிதொழில்நுட்டவியலாளர் சான்றிதழ் (என்.டி.ரி)
சம்பளம்-நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**பணிநிலை - III**

பதவி- வேலைமேற்பார்வையாளர்/ படவரைஞர்
தகைமை-1) க.பொ.த. உயர்தரம்
2) தேசியதொழில்நுட்ப சான்றிதழ் (என்.சி.ரி.)
சம்பளம்-நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

வேண்டுகைகள்கிடைக்கவேண்டிய கடைசித் திகதி :- 21.07.2004

வேண்டுகைகள் அனுப்பவேண்டிய முகவரி:-

எஸ்.என்.எஸ்.என்ஜினியர்ஸ்,
வி.ஆர்.ரி.கட்டடம்,
கண்டிவீதி,
கிளிநொச்சி. (4788)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் சிவப்பு நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்.**

01. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 ஏப்ரல் மாதத்திற்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான சிவப்பு நாட்டரிசியை (புழுங்கல்) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்வனவு செய்து கீழ்க் குறிப்பிடப்பட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கென கீழே தரப்பட்டுள்ள தொகை சிவப்பு நாட்டரிசியை நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல. | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின்அளவு ஏப்ரல் (MT) |
|---|---|---|
| 1 | சாவகச்சேரி | 190 |
| 2 | கைதடி | 70 |
| 3 | கொடிகாமம் | 135 |
| 4 | உடுப்பிட்டி | 32 |
| 5 | கட்டைவேலி-நெல்லியடி | 45 |
| 6 | பருத்தித்துறை | 114 |
| 7 | புலோலி | 27 |
| 8 | மருதங்கேணி | 80 |
| 9 | யாழ்ப்பாணம் | 311 |
| 10 | நல்லூர் | 161 |
| 11 | அச்சுவேலி | 154 |
| 12 | நீர்வேலி | 115 |
| 13 | மானிப்பாய் | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 |
| 15 | அளவெட்டி-மல்லாகம் | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 |
| 17 | சங்கானை | 183 |
| 18 | சுன்னாகம் | 196 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 40 |
| 20 | வேலணை | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 |
| 22 | காரைநகர் | 55 |
| 23 | தீவகம் | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 |
| | மொத்தம் | 2500 |

02. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 ஐ யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2004.07.09ஆம் திகதி தொடக்கம் 2004.07.22 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களை பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

03. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500.00ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடம் இருந்து கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

04 கேள்வி கோரப்படவுள்ள அரிசி சிவப்பு நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பதுடன் அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

05.பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவங்களை தலைவர் மாவட்டக் கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசஅதிபர் யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீளத்தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 2004.07.23ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாகச் சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விக்காரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

06. கேள்விப்பத்திரத்தின் தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் "சிவப்பு நாட்டுப்புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி " என எழுதப்படல் வேண்டும்.

07. கேள்விக்காரர்கள் (Bidders) குறிப்பிட்ட ப.நோ.கூ. சங்கங்களின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளைக் குறிப்பிடுவதற்கும் அருகதை உடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாக கருதப்படும்.

08. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர்கள் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக் கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Berformance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும் .

09. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் விநியோகத்திற்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும். பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியில் இருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி.10113)

# மத்திய மருந்தகத்திற்கு அடிக்கல் நாட்டல்

(முல்லைத்தீவு)

சிறிலங்கா இராணுவத்தால் சிதைக்கப்பட்ட மணலாற்று மத்திய மருந்தகத்தை கட்டியெழுப்புவதற்கான அடிக்கல் கடந்த செவ்வாய்க் கிழமை பி.ப 4.30 மணிக்கு முல்லை. மாவட்ட அரச அதிபரினால் நாட்டப்பட்டது.

நீப் நிறுவனத்தின் நிதியில் மத்திய மருந்தகமும் அமைக்கப்படவுள்ளது.

செம்மலை மத்தி கிராம அலுவலர் புஸ்பராசா தலைமை யில் ஆரம்பமான நிகழ்வில்,

மங்கல விளக்கினை பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி.ஜெயக்குலராஜா, கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் காசிப்பிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வரவேற்புரையினை துணுக்காய் உதவிக்கல்விப் பணிப்பாளர் ந. விஜயரட்ணம் (மணலாறு விஜயன்) நிகழ்த்தினார். அடிக்கல்லை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டாசுகுமார் நாட்டினார் கருத்துரைகளும் இடம் பெற்றது.

# தமிழீழ போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

தமிழீழ போக்குவரவுக் கழக நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 11.07.2004 ஆம் நாள், ஞாயிறு காலை 9.30 மணி தொடக்கம் பகல் 2.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழ போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி. 4765)

# நீர்ப்பாசனத் திணைக்களம் முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவில் உள்ள வவுனிக்குளம் D3, D8 வாய்க்கால் வீதிகள் புனரமைப்பதற்கான வேலைகளிற்காக ICTAD இல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகினறன. 09.07.2004 ஆம் திகதி தொடக்கம் 19.07.2004 பகல் 12.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வவுனிக்குளத்தில் அமைந்துள்ள பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். கேள்விப் பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 20.07.2004 பிற்பகல் 1.00 மணிவரை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00 மணிக்கு கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்வியை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விக்காரர் சமூகம் அளித்திருக்கலாம்.

கேள்விப் பத்திரம் பெறப்படும் போது மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 12940/=
மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 500/= செலுத்திய பின்பே வழங்கப்படும்.

பிரதி நீர்ப்பாசனப்பணிப்பாளர் பணிமனை,
முல்லைத்தீவுப் பிராந்தியம்,
வவுனிக்குளம்.


(சி. 9751)

எந்திரி எஸ் . எஸ் . சிவகுமார்,
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்.
முல்லைத்தீவுப் பிராந்தியம்.

PUBLIC LIBRARY JAFFNA

## -அவுஸ்-சிறிலங்கா இறுதி டெஸ்ட் போட்டி-


# லாங்கர், ஹெய்டன் அபார துடுப்பாட்டம் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில்



கையசைக்கும் லாங்கர்

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும், அவுஸ்திரேலியா அணிக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டியில் நேற்றைய முதல்நாள் ஆட்ட நேரமுடிவின் போது தனது முதல் இனிங்சிற்காக ஆடிவரும் அவுஸ்திரேலியா அணி வலுவான நிலையில் உள்ளது.

கெயின்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிறிலங்கா அணித்தலைவர் மாவன் அத்தபத்து அவுஸ்திரேலியாவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.



சதமடித்த ஹெய்டன்

இதன்படி ஆட்டநேரமுடிவின் போது மத்யூஹெய்டன், ரிக்கி பொண்டிங் ஆகியோரின் விக்கெட்டுகளை இழந்து அவுஸ்.அணி 370 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இதில் ஹெய்டன் 117 ஓட்டங்களையும், பொண்டிங் 22 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது லாங்கர் 159 ஓட்டத்தையும் மாட்டின் 56 ஓட்டங்களையும் பெற்று களத்தில் இருந்தனர். பந்துவீச்சில் மாலிங்க, திலான் சமரவீர ஆகியோர் தலாஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர்.மத்யூஹெய்டனுடன் லாங்கர் இணைந்து முதல்விக்கெட்டுக்காக 255ஓட்டங்களைப் பகிர்ந்தனர். இதுவே சிறிலங்கா அணிக்கு எதிரான அவுஸ்திரேலியாவின் ஆரம்ப ஜோடிபெற்ற அதிகூடிய ஓட்டமாகும். இதற்கு முன்னர் 228 ஓட்டங்களைப் பகிர்ந்ததே சாதனையாகும்.இதேவேளை அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் டெஸ்ட் போட்டிக்கு தாய்நாட்டில் தலைமை தாங்கும் முதலாவது போட்டியும் இதுவாகும்.

# சிம்பாப்வே அதிருப்தி வீரர்கள் இணைந்து புதிய கிரிக்கெட் அணியை உருவாக்கினர்

சிம்பாப்வேயின் பிரச்சினைக்குள்ளான கிரிக்கெட் வீரர்கள் புதிய பெயரில் ஒரு அணியை அறிவித்துள்ளனர். "ரெட் லயன்ஸ்" (Redlions) என பெயர் சூட்டப்பட்டுள்ள அணி எதிர்வரும் 14ஆம் திகதி இங்கிலாந்தின் கென்ட் அணியுடன் விம்பிள்ட னில் தனது முதலாவது போட்டியை ஆரம்பிக்கும்.




இதனைவிட மேலும் ஐந்து ஒருநாள் போட்டிகளும் இம்மாத முடிவுக்குள் நடைபெறவிருக்கிறது. அணியில் முன்னாள் அணித்தலைவர்களான ஹீத்ஸ்ரிக் , கிராண்ட் பிளவர் மற்றும் ஸ்டுவர் காலல் ஆகியோரும் அடங்குவர். இங்கு நடைபெறும் போட்டிகள் முக்கிய மற்றவை எனவும் பொழுதுபோக்கானவை எனவும் இது எந்த விதத்திலும் தேசிய அணியைப் பாதிக்காது எனவும் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் அணி வீரர்களுக்கு நிறைய நண்பர்களும் ரசிகர்களும் இருப்பதால் முதலாவது போட்டியை அங்கு நடாத்துவது என தீர்மானித்திருப்பதாகவும் ஏனைய நாடுகளுக்கும் விஜயம் செய்ய தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நட்வேட்ஸ் கிண்ண இறுதிப்போட்டி இன்று

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் நட்வேட்ஸ் கிண்ணத்திற்கான முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டியில் மேற்கிந்தியத்தீவு, நியூசிலாந்து அணிகள் இன்று மோதுகின்றன. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெறும் அணிக்கேவெற்றி பெறும் சாதகமான வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சுவிஸ் ஒப்பன் டென்னிஸ் காலிறுதிக்கு ஜேர்மன் வீரர் றெஜினர் சட்லர்

சுவிஸ் ஒப்பன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிச்சுற்றுக்கு ஜேர்மன் வீரர் றெஜினர் சட்லர் தகுதி பெற்றுள்ளார்.

இப் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் சகநாட்டு வீரரான குளோரியன்மேயரை எதிர்கொண்டசட்லர் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 6-3., 6-2 என்ற செட் கணக்கில் எளிதில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.


மற்றொரு ஆட்டத்தில் ஆறாம் நிலை வீரரான ஸ்பெயின் நாட்டின் டேவிற் மிரர் சக நாட்டு வீரர் எலிக்ஸ்மாண் டிலாவிடம் தோல்வியடைந்தார். சுவிஸ் வீரர் மார்க்ரிச்சட் செக் குடிரசு வீரர் ரெடக் ஸ்ரீபன் ஆகியோருக்கு இடையே நடைபெறவிருந்த ஆட்டம் மழை காரணமாக நிறுத்தப்பட்டது.



ஒலிம்பிக் நீச்சல் போட்டிக்காக நடைபெற்ற தகுதிப்போட்டியில் உலக சாதனையான 100 மீற்றர் தூரத்தை 59.30 செக்கனில் நீந்தி வென்ற பிறன்டன் ஹான்சன்.

# ஆசிய கோப்பைக்காக சிறிலங்கா,பாகிஸ்தான் அணிகளிடம் கடுமையாகப் போராட வேண்டும்

**சௌரவ் கங்குலி**



ஆசியக் கோப்பை கிரிக்கெட்போட்டியில் சிறிலங்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளிடம் இருந்து கடும் சவால் இருக்கும். எனவே இவ்விரு அணிகளிடமும் கடுமையாகப் போராட வேண்டும் என இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி கூறினார்.

ஆசியக்கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி இலங்கையில் வருகிற 16ஆம் திகதி தொடங்கி ஆகஸ்ட் 1ஆம் திகதி வரை நடக்கிறது. இதில் பங்கேற்கும் இந்திய அணி வீரர்களுக்கான பயிற்சி முகாம் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் கடந்த 3ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

பயிற்சி முகாமின் நிறைவு நாளான நேற்று முன்தினம் காலை இந்திய அணித்தலைவர் கங்குலி நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். இப்பேட்டியில்

இந்த சீசனில் துவக்கப் போட்டியாக ஆசியக் கோப்பைப் போட்டி இலங்கையில் நடைபெறுகின்றது. இது நல்ல துவக்கமாகும். இதில் மோதுகின்ற அணிகளான இலங்கையையும் பாகிஸ்தானையும் சுலபமாக எண்ணிவிட முடியாது. இலங்கை அணிக்கு உள்ளூர் மைதானங்களில் போட்டிகள் நடைபெறுவது கூடுதல் பலமாகும். அதேபோல் பாகிஸ்தான் அணியும் பலமான அணியாக இருப்பதால் போட்டி கடுமையானதாக இருக்கும்.

கடந்த சீசனில் இந்திய அணி சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிகளைக் குவித்தது. அதேபோல் வெற்றிகளைக் குவிக்கும் திடமான அணியாக உள்ளது. பெங்களூரிலும் சென்னையிலும் நடைபெற்ற பயிற்சி முகாம்கள் இந்திய அணி வீரர்களை மேலும் செம்மைப்படுத்த உதவின

ஒருநாள்போட்டிகளில் துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் சிறப்பாக விளையாடினால் வெற்றி பெறுவது உறுதிதான். நம் அணியிலுள்ள 7துடுப்பாட்ட வீரர்க ளும் அதுபோல் விளையாடினால் வெற்றி எளிது. சுழல்பந்து வீச்சாளரான ஹர்பஜன்சிங் மீண்டும் அணிக்குத் திரும்பி இருப்பது மகிழ்ச்சி இவருடன் அனில்கும்ளேயும் இணைந்து விக்கெட்டுக்களை வீழ்த்தவேண்டும் ஹர்பஜனும், கும்ளேயை போல் பந்து வீச்சுத்தரத்தை உயர்த்திக் கொள்ளவேண்டும். அணியில் 4வேகப்பந்து வீச்சாளர்கள் இருப்பதால் எதிரணியை திறமையுடன் எதிர்கொள்ள முடியும் என்றார் கங்குலி.



சிறிலங்காவில் நடைபெறவுள்ள ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சியில் ஈடபட்டுள்ள இந்திய அணி வீரர்கள்.

# கிளி.இளையோர் செயற்பாட்டு நிறுவனம் நடாத்தும் இளையோருக்கான உதைபந்தாட்டப் போட்டி-2004

14வயது, 20 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகள் கலந்துகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று எதிர்வரும் 12 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பொதுமைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் கலந்துகொள்ளும் அணியில் குறைந்தது 05 பேர் உதைபந்தாட்ட காலணி அணிந்திருத்தல் வேண்டும். அணியில் 15 பேர் இடம்பெற முடியும். இவர்கள் பந்து கட்டுப்பாட்டுப் பயிற்சி மற்றும் ஓட்ட திறன்களுக்கான முன் சோதனைகள் நடத்தப்படும். 20 வயதுக்குட்பட்ட அணி 11 பேரும் காலணி அணிந்திருத்தல் வேண்டும். மகளிர் அணி 07 பேர்கொண்ட அணியாக அமையும்.

14வயதுப் பிரிவு- பங்குபற்றும் பாடசாலைகள் (01.01.1991 இன் பின் பிறந்தோர்)


வட்டக்கச்சி மகாவித்தியாலயம்,இராமநாதபுரம் மகாவித்தியாலயம்,கிளிநொச்சி மகாவித்தியாலயம், உருத்திரபுரம் மகாவித்தியாலயம், முழங்காவில் மகாவித்தியாலயம், பளை மத்திய கல்லூரி.

**லீக் முறையிலான போட்டி(20 வயதுக்குட்பட்டோர் ஆண்கள்)**

**(01.01.1985 இன் பின் பிறந்தோர்)**

கிளிநொச்சி தெரிவு,உருத்திபுரம் தெரிவு, வட்டக்கச்சி தெரிவு (11பேரும் காலணிஅணிந்திருத்தல் வேண்டும்)

பங்குபற்றும் அணிகள் நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பொதுமைதானத்திற்கு வருகை தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.'



## சிந்தனைக்கு

நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை, துரோகம்இழைக்கவும் இல்லைஆனால் எம்மை யாரும் ஏமாற்றினாலும் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 10-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com


## எத்தனை அரசாங்கம்?

சிறிலங்காவில் இன்று ஒரு அரசாங்கம்தான் உள்ளதா? ஒரு இராணுவம் தான் உள்ளதா? அன்றி இரு அரசாங்கமும், பல இராணுவங்களும் உள்ளனவா? என்ற கேள்விகளுக்குத் தவிர்க்க முடியாது பதில் காணவேண்டியுள்ளது. ஏனெனில்,சிறிலங்கா அரசு/அரசாங்கம் என்றரீதியில் ஒரு தரப்பினரை இன்று கொள்ள முடியாதுள்ளது.

சனாதிபதியாக சந்திரிகாவும், அவர்தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியென அரசாங்கமும் இருக்கின்றபோதும் இன்று அரசாங்கத்திற்கு வெளிப்படையாகவே ஜே.வி.பி. உரிமை கோருகின்றது. ஜே.வி.பி.யின் இன்றைய நிலைப்பாட்டின்படி ஆட்சியாளர்களாகத் தாங்களே – ஜே.வி.பி.யினரே – உள்ளனர்.

அதாவது, ஐ.ம.சு. முன்னணி என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா தீர்மானங்கள் எதையும் மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள ஜே.வி.பி.யினர்தயாராகஇல்லை. சனாதிபதி சந்திரிகா தனதுபத விக்கானநிறைவேற்றுஅதிகாரத்தைப் பயன்படுத் துவதற்குக் கூட இன்று ஜே.வி.பி.யின் ஆலோசனைபெற வேண்டிய நிலையே உள்ளது. இதேசமயம் ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகாவிற்குச் சில பகிரங்க எச்சரிக்கைகளைவிடக் கூடத் தயங்கவில்லை.

குறிப்பாக,விடுதலைப்புலிகளுடன்சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தல் அன்றி இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுக்களை நடத்துதல் போன்ற விடயங்களில் இவ் எச்சரிக்கைகள் பகிரங்கமாகவே விடுக்கப்பட்டதுண்டு. இத்தனைக்கும் சனாதிபதி சந்திரிகாவோ அவரது அரசாங்கமோ விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான உருப்படியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்கம் இவ்வாறு அல்லாடிக் கொண்டிருக்கையில், சிறிலங்கா இராணுவமும் பல பிரிவுகளாகச் செயற்படுவதாகவுள்ளது. இது குறித்ததகவல்கள் கருணாவிவகாரத்துடன் வெளிவரத் தொடங்கியது. இராணுவத்தினரில் ஒரு பகுதியினர் கருணாவிற்கு உதவியிருக்கலாம் என்ற தகவல் அரச தரப்பினாலேயே வெளியிடப்பட்டது. ஒரு சிரேஷ்ட அமைச்சரே இதனைத் தெரிவித்தார்.

இதன் பின்னரான தகவல்கள் இதனை மறுப்பதாக வெளிவந்ததாயினும் உண்மையில் கருணா விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பது வெளிப்படையானதாக தெரிவதாசவே இருந்தது . இதனைப் புதிய இராணுவத் தளபதியின் பேச்சுக்கள் கூட ஓரளவு உறுதி செய்வதாகவே உள்ளது. அதாவது, இராணுவத் தரப்பில் முன்னைய தளபதிகள் / அதிகாரிகள் அரசாங்கத்தின் அங்கீகாரமோ பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரமோ இன்றித் தம்மிஷ்டத்திற்குச் செயற்பட்டதாக அவர் தனது பதவி ஏற்பு நிகழ்வில் பேசியபோது தெரிவித்திருந்தார். இதேவேளை, கிடைக்கப்பெறும் தகவல்களும் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை தன்னிஷ்டத்திற்குச் செயற்பாடுகளைக் கொண்டதாக உள்ளதையே வெளிப்படுத் துகின்றது. அண்மையில் கருணா விவகாரத்துடன் இராணுவப் புலனாய்வுத் துறையேபெரிதும் தொடர்புபடுத்தப்பட்டதுண்டு. அத்தோடு, கருணா ஆரம்பம் முதலே சிறிலங்கா புலனாய்வுத் துறையுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுபவராகவும் இருந்துள்ளார். தற்பொழுதுகூட கருணா இராணுவப் புலனாய்வுத் துறையுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளதாகவும் புலனாய்வுத்துறையின் பாதுகாப்பில் இருப்பதாகவுமே கூறப்படுகின்றது.

ஆனால், புதிய இராணுவத் தளபதி இனி மேல் அப்படியான செயற்பாடுகள் இருக்கமாட்டாது எனக் கூறினும் இராணுவத் தரப்பின் செயற்பாடுகளில் பெரிய மாற்றங்கள் எவையும் இடம் பெற்றதாக இல்லை. இராணுவத் தரப்பின் செயற்பாடுகள் தற் பொழுது சமாதானத்திற்கு எதிராக குழப்பம் விளைவிப்பனவாகவே உள்ளன.இதற்கு எடுத்துக்காட்டாக ஹிங்குராங் கொட பௌத்த விகாரையில் 14தமிழ்இளைஞர்கள் கைதுதொடர்பாக விவகாரம் கொள்ளத்தக்கதாகும். கருணாதரப்பைச் சார்ந்த வர்களாக அடையாளம் காணப்பட்ட இவர்கள் இராணுவப் புலனாய்வுத்துறையினரின் ஒத்துழைப்புடனேயே செயற்பட்டனர். இவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் ஒருசிறு விபத்துப் போன்றது. பின்னர் புலனாய்வுத்துறையினராலேயே அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுவிட்டனர். சிறிலங்கா நீதித்துறை இதற்கு தன்னலான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

இராணுவத்தின் ஒரு தரப்பினர் இவ்வாறாக செயற்பட்டுக் கொண்டிருக்கையில் இராணுவத்தளபதியோ கருணா எங்கிருக்கின்றார் என்பது எமக்குத் தெரியாது இராணுவத்திற்கு கருணாவின் உதவிதேவையில்லை கிழக்கில் நடக்கும் சம்பவங்களுக்கும் இராணுவத்திற்கும் எந்தவிததொடர்பும் இல்லை என்கின்றார்.அவ்வாறானால் தற்பொழுது கருணாவிற்குப் பாதுகாப்பு அளிக்கும் இராணுவத்தினர் யார்? கருணாகுழுவை இயக்கும் இராணுவத்தரப்பினர் யார்? சிறிலங்கா அரசாங்கம், ஆயுதப்படைத்தரப்பு –குறிப்பாக இராணுவமும் தற்பொழுது முரண்பாடுகளைக் கொண்டவையாகத் தனித்தனிப் பிரிவுகளாக இயங்குகின்றனவா? அவ்வாறு இயங்குவதானால் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதானால் யாருடன் பேசுவது ? சிறிலங்கா இராணுவத்தரப்பு எனின் யாருடைய தீர்மானத்திற்குச் செயற்படுவது.

இந்தவகையில் அரசாங்கத்திற்கும் இராணுவத்தரப்பிற்கும் இடையில்பிளவோ, முரண்பாடோ இல்லாது விடில் அரசாங்கத்தாலும் இராணுவத்தாலும் தற்பொழுது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பு வதற்கான அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் திட்டமிட்ட செயற்பாடாகவே இருக்கமுடியும். இவ் எதிர்பார்ப்பு சரியானதாக இருக்குமானால் இவைகளில் சமாதானம் என்பது அண்மையில் சாத்தியமற்ற தாகிவிடும்.

# சுதந்திர ஊடக ஆணைக்குழு அமைக்கும் எதிர்க்கட்சியினரின் கோரிக்கை அறிவற்றது

### சிறிலங்கா அரச தரப்பு கூறுகிறது

(கொழும்பு)

எதிர்க்கட்சித் கூட்டணி சுதந்திர ஊடக ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு அண்மையில் விடுத்துள்ள வேண்டுகோள் அரசியல் சாசனம் பற்றிய அறிவின்மையை எடுத்துக் காட்டுவதாக சனாதிபதி சட்டத்தரணியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினருமான விஜயதாஸ ராஜபஷ்ஷ தெரிவித்துள்ளார்.

அரச ஊடகம் ஒன்றிற்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: இந்த நாட்டில் செயற்படும் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்படுகின்றன என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி இருக்கிறது.

ஆனால் ஐக்கியதேசியக் கட்சியில் சிலர் அரச ஊடகங்களை சுதந்திர மயப்படுத்துவது பற்றிப் பேசிவருகிறார்கள்.

ஆனால் இவர்கள் தனியார் ஊடகங்களை சுதந்திரமயமாக்குவதுபற்றிப்பேசுவதில்லை.

சகல ஊடகங்களும் சுதந்திரமயப்படுத்துவதே எங்களுடைய பொதுவான நிலைப்பாடு.

சனநாயக நிலைப்பாடு பற்றியும் ஐக்கிய தேசியக் கட்சியினர் பேசுவதில்லை.

அவர்கள் ஆட்சியில் இருந்த போது அரசஊடகங்களைச் சுதந்திரமயப்படுத்துவது குறித்து எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நாட்டில் சுதந்திரத் தேர்தல் அமைப்பு, பொலிஸ் அமைப்பென சுதந்திரஅமைப்புக்களை அறிமுகப் படுத்தியது எமது அரசாங்கமே எனவும் அவர் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளில் விசேட கவனம் செலுத்த வேண்டியது அரசின் பொறுப்பு

### -மல்வத்த பீடாதிபதியிடம் ரணில்

(கொழும்பு)

இந் நாட்டுக்கு சமாதானம் முக்கியமானது. இதில் விசேட கவனம்எடுக்கவேண்டிய பொறுப்பு எந்த அரசுக்கும் உரியதே . எமது கட்சியே 2002ஆம் ஆண்டில் சமாதானத்தை ஏற்படுத்தியது. அது தொடர்ந்து அமுலில் இருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆயினும் சதா எதிர்க் கட்சி மீது குற்றம் சுமத்திக் கொண்டிருப்பின் சமாதான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்க முடியாது.

இவ்வாறு மல்வத்தப் பீடாதிபதியைச் சந்தித்த எதிர்க் கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது வாழநாள் முழுவதும் யுத்தத்தில் ஈடுபட முடியாது எனவும் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று இறுதித்தீர்வு எடுக்கப் படுவதை நாம் விரும்புகிறோம் என்றும் கூறினார்.

# பிரதம நீதியரசருக்கு அவதூறு ஏற்படுத்த ஊடகங்கள் சில முயல்கின்றன

### -சட்டத்துறை நிபுணர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சிறிலங்காவில் பிரதமநீதியரசர் சரத் என்சில்வாவிற்கு அவதூறு ஏற்படும் வகையில் சில ஊடகங்களும் சில பிரிவினரும் செயற்பட்டு வருவதாக சட்டத்துறை நிபுணர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்தச் செயலானது நீதிமன்றச் செயற்பாடுகளில் பங்கம் ஏற்படுத்துவதாகஅமையும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். .இதேவேளை இது தொடர்பாக சிறிலங்கா நீதிமன்ற பதிவாளர் சங்கம் பொலிஸ்மா அதிபருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பியுள்ளது. அதில் இது சம்பந்தமாக நியாயமான விசாரணைகளை உடனடியாக ஆரம்பித்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அதில் கேட்கப்பட்டுள்ளது. —

அந்தஅறிக்கை மேலும் தெரிவிக்கையில்:நீதிமன்றத்தின் முன்குற்றம் சாட்டப்பட்டு நிறுத்தப் பட்டுள்ள ஒரு பிரிவினரே இவ்வாறான சதி வேலைகளில் ஈடுபடுகிறார்கள் எனவும்அதில்சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தச் சம்பவத்தின் பாரதூரத்தன்மை தொடர்பாக மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி விடுத்தவிசேட அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

# பாராளுமன்றில் பெரும்பான்மை இல்லை அரசு கௌரவமாகப் பதவி விலகுவதே சிறப்பு

### -ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் மூன்று முறைகள் பாராளுமன்றத்தைக் கூட்டியும் அதிக பெரும்பான்மைப் பலத்தை பாராளுமன்றத்தில் நிரூபிக்க தவறியுள்ள படியால் இவர்கள் கௌரவமாகப் பதவி விலக வேண்டும் என ஐக்கியதேசியக்கட்சியின் கண்டிமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பிரதமர் சனாதிபதியால் நியமிக்கப் பட்டுள்ளார். ஆனாலும் அவர் அதிக பெரும்பான்மை வாக்குகள் தனக்குப்பாராளுமன்றத்தில் உள்ளதென இதுவரை நிரூபிக்கப் படவில்லை 116அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சபாநாயகருக்கு எதிர்க்கட்சியினர் பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் நிரூபித்துள்ளனர். ஆகவே பிரதமர் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அதிகபெரும்பான்மை பெறாதவராலனதால்அவர் பிரதமர் பதவி செல்லுபடி அற்றதென்று திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் குறிப்பிட்டுள்ளார்.

# ரவிகருணாநாயக்காவை பத்துத்தடவை சிறைக்கனுப்ப என்னால் முடியும்

### -சனாதிபதி சந்திரிகா அச்சுறுத்தல்

ஐக்கிய தேசிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை பத்துத் தடவைகள் சிறைக்கு அனுப்ப தன்னால் முடியும் என சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

முல்லேரியாவில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றிய சனாதிபதிசந்திரிகா, ரவிகருணாநாயக்கவுக்கு எதிராக தேவையான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாக கூறியுள்ளதுடன்,அந்த ஆதாரங்களுடன் அவரை பத்துத்தடவைகள் சிறைக்கு அனுப்ப தன்னால் முடியும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அமைச்சராக இருந்த ரவிகருணாநாயக்காவே அடிப்படை வாழ்க்கைச் செலவின்கான திடீர் அதிகரிப்பின் முழுப் பொறுப்பு எனவும் சனாதிபதி பகிரங்கமாககுற்றம் சாட்டியுள்ளார். இதேவேளை ஊழல்குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்காவுக்கு கோட்டை நீதிமன்றம் கடந்த புதன்கிழமை 5மிலிலியன் ரூபா சரீர முன்பிணை ஒன்றை கடந்த புதன்கிழமை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

JAFFNA

# கிளி.யில் தமிழரின் கல்வித் தேவையும் இன்றைய நிலைகுறித்த ஆய்வுப் பட்டறையும்

(அலுவலகசெய்தியாளர்)

தமிழரின் கல்வித்தேவைகளும் இன்றைய நிலையும் குறித்த ஆய்வுப்பட்டறை நேற்றுக் காலை 10.00மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் மேம்பாட்டு செயலகத்தில் நடைபெற்றது.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வரவேற்புரையினைத் திட்டமிடல் மேம்பாட்டு செயலக செயலாளர் நாயகம் தூயவன் நிகழ்த்தினார். தொடர்ந்து பட்டறையின் குறிக்கோள் அறிமுகமும் இலக்கும் குறித்து தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் அவர்களும் தமிழரின் கல்வி ஓர் சிந்தனைத் தூண்டல் எனும் பொருள் குறித்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களும் கருத்துரை நிகழ்த்தினர். தொடர்ந்து பட்டறையின் செயற்பாட்டு முறை, கருத்துச் சங்கமம், குழுநிலை ஆய்வுகள், ஆய்வு அறிக்கையிடல் என்பன இடம் பெற்றன.

இப்பட்டறை நிகழ்வில் சிரான் செயலகப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், தமிழீழக் கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர், ஜி.ரி.இசற் நிறுவன பணிப்பாளர் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் துறைசார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்று ஆய்வுரைப் பட்டறையின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## கிளிநொச்சி...

மாலை 4.30மணிக்கு இடம் பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினைப் புலிகளின் குரல் பொறுப்பாளர் ந.தமிழன்பன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து நிகழ்வுகள் மண்டபத்தில் இடம் பெற்றன. அங்கு பொது ஈகச்சுடர் ஏற்றி அகவணக்க நிகழ்வோடு நிகழ்வுகள் ஆரம்பமானது. வரவேற்புரையினை தமிழீழ நிதர்சனத்தின் மகளிர் பொறுப்பாளர் நிகழ்த்தினார். தொடர்ந்து தலைமையுரையினை அடுத்து நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை சிறப்புரை ஆற்றினார். அடுத்து வெளியீட்டு உரையினை நிதர்சனப் பொறுப்பாளர் சேரழ்தன் நடாத்தினார்.

அடுத்து இந்த வீடியோப் படக் காட்சிக்கும், ஒலிப்பேளை வெளியீட்டுக்கும் முன்னின்று உழைத்த கலைஞர்கள், படைப்பாளிகள், பாடகர்கள் போன்றோர் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்குரிய பரிசில்களை கேணல் சூசை, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், கடற்புலிகளின் மகளிர் தளபதி ஜெரோமினி போன்றோர் வழங்கி கௌரவித்தனர்.அதையடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. இதன் முதற் பிரதியை கேணல் சூசையிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் பெற்றுக் கொள்ளத் தொடர்ந்து அனைத்துப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

அடுத்து ஒலிப்பேளைக்குரிய மதிப்பீட்டு உரையினை தமிழ்க்கவி நிகழ்த்தினார். இறுதியாக நன்றியுரையுடன் நிகழ்வு முடிவுற்றதும் வீடியோப் படக்காட்சி இடம் பெற்றது. (சோ.கு)

## வட...

பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், எம்.எக்ஸ் கருணாரட்ணம் அடிகள், மட்டு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம், யாழ மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், தமிழீழ காவல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் மாதவன், மகளிர் அமைப்புச் சார்பாக செல்வி கீதா, யாழ். பல்கலைக்கழக மருத்துவத்துறை விரிவுரையாளர் சிவபாலன், சட்டத்தரணி சிவபாலன் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

மனித உரிமை விடயங்கள் அனைத்தும் செயல் முறைப்படுத்தும் வகையில் ஆரம்பித்து வைக்கப்பெற்றுள்ள வடகிழக்கு மனித உரிமைக்கான ஏழு பேர் கொண்ட குழுவும் தெரிவு செய்யப்பெற்றது.

குழுவின் பொறுப்பாளராக எம்.எக்ஸ் கருணாரட்ணம் அடிகளாரும்,குழு அங்கத்தவர்களாக மட்டு. பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரன், சட்டத்தரணி சிவபாலன் (திருமலை) யாழ். பல்கலைக்கழக மருத்துவர் விரிவுரையாளர் டாக்டர் சிவபாலன், யாழ். பல்கலைக்கழக நூலகத்தைச்சேர்ந்த சிறி அருளானந்தம், மனித உரிமைகள் ஆர்வலர் க. மாலதி ஆகியோரும் தெரிவுசெய்யபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ.கு)

## இல...

டுள்ளது. ஆசியன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாஸில் பெர்னாணடோ, இது தொடர்பில் இலங்கைக் காவல்துறை ஆணைக்குழுத் தலைவர் ரஞ்சித் அபேசூரியவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கையில் காவல்துறையினர் மேற்கொள்ளும் பொதுமக்கள் மீதான வதைகள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளாமையின் ஊடாகக் காவல்துறையினரின் வதை இம்சைகளுக்கு தேசிய காவல்துறை ஆணைக்குழு உதவும் செயற்பாடுகளைச் செய்து வருவதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசியக் காவல்துறை ஆணைக்குழு,சிறந்த முறையிற் செயற்படுமானால் அதற்குத் தாம் முழுமையான ஆதரவைத் தருவதாக தெரிவித்துள்ள பாஸில் பெர்னாண்டோ., பொதுமக்களைத் துன்புறுத்தும் எவ்வித நடவடிக்கைக்கும் இடம்தர வேண்டாம் எனக் கேட்டுள்ளார்..இலங்கையின் காவல்துறை மற்றும் இராணுவத்தில் தமிழர்கள் அதிகளவில் இடம்பெறச் செய்ய வேண்டும் என இந்தியப் பஞ்சாப் மாநில உயர் பாதுகாப்பு அதிகாரி மி.ள. கில் கேட்டுள்ளார். அவ்வாறான நிலையிலேயே இலங்கையில் நிலவும் தமிழ் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## யாழ்....

உறவினரொருவரைப் பார்வையிடச் சேர்ந்து வருகை தந்துள்ளனர். அவ்வேளையில் அவ்விருவருக்கும்இடையேஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்தே அவர்களில் ஒருவரைக் கையில் வைத்திருந்த உளியினால் குத்தியுள்ளார்.

சம்பவத்திற் காயமடைந்தவரான க.தங்கராசா (வயது44) சிகிச்சைக்காக வைத்தியசாலையில்தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை அவரைக்குத்திக் காயப்படுத்திய அவரது மருமகனான 19 வயதேயானஇளைஞனைப் பொலிசார் கைது செய்து அழைத்துச்சென்றுள்ளனர். (27)

## மனித உரிமை...

நாயகத்தைப்பற்றி அதிகமாகச் சிந்திக்கின்ற ஒரு தலைவனுடைய வழிநடத்தலில் நாங்கள் இருக்கின்றோம் ஆனால் அது சரியாக உலக அரங்கிற்குப் போகவில்லையே என்பது எமக்குக்கவலையாகவுள்ளது என்றார்.

நாங்கள் பேச்சுவார்த்தைக்கென இராஜதந்திரிகளை சந்திக்கின்ற போது எல்லோரும் மனிதவுரிமையை வலியுறுத்தி வந்தனர்.இங்கு நடக்கின்ற குறைகள் உலகிற்குத் தெரியாது. உலகிற்குத் தெரிவதற்கு என்ன வழி முறைகளைக் கையாண்டுள்ளீர்கள் எனக் கேட்ட வேளை உண்மையில் அதில் நாங்கள் மௌனமாகிப் போகிறோம் உண்மையில் நிறைய விடயங்கள்தெரியாது இன்றைக்கு இக்குறையை இந்த அமைப்பு நிச்சயமாக நீக்குமென நினைக்கிறேன் என்றார்.

நாங்கள் உலகத்தினுடைய மனித உரிமைக் கோட்பாடுகளை எல்லாம் கற்றுத் தெளிந்து வந்தவர்கள் அல்ல. இருப்பினும் அதை விட அதிகமாக மனித நேயத்தைப் பற்றியும், மனிதவுரிமைகளைப் பற்றியும் சிந்தித்து நடப்பவர்களாக இருக்கிறோம். இதனை உலகத்திற்கு வலியுறுத்திச்சொல்ல வேண்டிய ஒரு தேவையாக இருக்கிறது. உண்மையில் ஒரு போராட்ட சூழலில் மனித வுரிமை பேணுவது மிகமிகக் கடினமான காரியம் ஆயினும் நாங்கள் அதனை மிக இறுக்கமான கட்டுப்பாடுகளின் ஊடாக எமது விடுதலை அமைப்பை வளர்த்துவருகிறோம்.

இம்மனிதவுரிமைகள் மையம் இன்று செயற்படுவதோடு உண்மையில் மனித உரிமை சம்பந்தமான விழுமியங்கள், கோட்பாடுகள் உலகளாவிய ரீதியான இணங்கப்பாடுகள் சம்பந்தமாக நாங்கள் எமது மக்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் தவறில்லை அப்படியான ஓர் விழிப்புணர்வை நாங்கள் எல்லா மாவட்டத்திலும் கொண்டு வருவது ஓர் ஆரோக்கியமான விடயம் என்றால் எங்களுக்கு அது கஸ்டமாக இருக்கப் போவதில்லை. ஏனெனில் எமது தலைவர்எமதுவிடுதலை அமைப்பு, மக்கள் எல்லோருமே ஓர் இறுக்கமான கட்டுக்கோப்பான ஒழுக்கத்தை இறுக்கமாகப்பேணிக்கொள்கின்ற ஓர் கட்டமைப்பாக தோற்றம் பெற்றுள்ளமையால் மனித உரிமைகள் சம்பந்தமாக அதிகம் கவலைப்பட வேண்டிய தேவை எங்களிற்கு நிச்சயமாக இருக்காதென வலியுறுத்தினார். ஆனால் இதனை நாங்கள் ஓர் வடிவமாக ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறையாக, நடவடிக்கையாக நாங்கள் செய்ய வேண்டும். இதற்கு உதாரணமாக யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து யார் எனத் தெரியாது அண்மையில் தான் தெரியவேண்டி வந்தது. மாணவர்கள் எதிர்த்துப்போராட்டம் செய்தபடியால்அவர் வந்துபோயுள்ளார்.எனத்தெரிவித்தது தனி ஒருவர் ஒருசில ரால் பல்கலைக்கழக நிர்வாகமே அதற்கு தொடர்பில்லையென மறுத்த போதிலும் மனிதவுரிமைகள் சம்பந்தமாக அவர்கள் வெளியிடுகின்ற அறிக்கை உலகளாவிய ரீதியில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதன் காரணம் என்னவெனில் நாங்கள் மௌனமாக இருக்கின்றோம். நாங்கள் நிறையச் செய்கின்றோம். இதில் நாம் அக்கறையுடன் செயற்பட்டுக் கொண்டிருந்தாலும், இதனை அரசு ஓர் பெரிய ஆயுதமாக எடுத்துக் கொண்டு தமிழ்த்தேசியத்திற்கு எதிராக தமிழ் தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கிற சக்திகளுக்கு அவர்களே பணத்தைக் கொடுத்து அவர்களே வசதிகளைச் செய்துகொண்டு அவர்களை வைத்து இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்.அதனால் தான் இன்று வட-கிழக்கு எமது தாயகத்தின் மனிதஉரிமைகளினுடைய வெளிப்பாடாக இன்று முழு உலகமும் போற்றுகின்றது. நாங்கள் இதனை மாற்றி அமைக்க வேண்டுமானால் உண்மைகளை வெளியில் கொண்டு வரவேண்டும் உண்மைகள் எமக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கிறது. இதனை வெளி உலகிற்கு நாங்கள் கொண்டு போக வேண்டும் அதற்கு தலைவர் கேட்டதற்கு நல்லதோர் பதிலும் கிடைத்துள்ளது. தகுதியான ஆக்கள் இல்லையா? எனக் கேள்வி எழுப்பினர் நான் நேற்று முன்தினம் சந்திக்கின்ற வேளை கூறினேன் இவ்வளவு பேரும் சேர்ந்து இதனை தொடங்குகின்றனர் என அவ நக்கு மிக மகிழ்ச்சி எல்லோ நம் இதில் தீவிர சிந்தனை உடையவர்களும், தீவிரமாகச் செயற்படுபவர்களும் மற்றும் தமிழ்த் தேசிய பற்றாளர்கள் என்ற ரீதியில் எமக்கு மிகுந்த நம்பிக்கையிருக்கிறது நாங்கள் பரந்தளவில் அதனைத் தமிழ் மக்களுடைய கையிலே இந்த மனிதவுரிமைகள் செயற்பாட்டை எமது கையிலே எடுக்கின்ற ஓர் காரியத்தை இன்றைக்கு சாதித்துள்ளோம் என்றார். அதனை நாங்கள் வடிவாச் செய்வோம் செய்யக்கூடிய ஆற்றல் உள்ள எல்லோரும் இருக்கின்றோம் அதற்குரிய தகுதிகள், அனுபங்கள் இருக்கு நிச்சயமாக நாங்கள் உங்களுக்கு முழு பக்கபலமாக இருப்போம் என்றார். எமது மூத்த தலைவர்கள் கடந்த காலதில் கடுமையாக உழைத்துள்ளனர் எங்களது இனத்தின் விடுதலைக்காக அகிம்சை வழியில், சனநாயக வழியில் எல்லாம் கடுமையாக உழைத்தனர்.ஆனால் எதிரி வந்து எம் மீது வன்முறையைத் தொடுக்கின்ற வேளை அதனை எதிர்கொள்வதற்கானபாதையைத்தெரிவு செய்யாததே அக்காலத்தில் விட்ட தவறு ஒழிய மற்றும் படி முயன்றுள்ளனர். ஆனால் நாங்கள் இன்று ஆயுதப் போராட்டங்கள் செய்து மக்களுடைய உரிமைப் போராட்டத்தைச் சர்வதேச மயப்படுத்தியுள்ளோம். ஆனால் எமக்கு எதிராகப் பிரயோகிக்கின்ற ஆயுதம் ஒன்று உண்டு. மனிதவுரிமை.'

எமது இனத்தின் பிரச்சினையை வெளியில் கொண்டுசெல்வதற்குச் சர்வதேச அளவில் இன்றைக்குப் பலமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற மனிதவுரிமைகள் அமைப்புகள் இவர்களோடு நாங்கள் உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்துவதன் ஊடாகவும் எமது பிரச்சினையை நாங்கள் சர்வதேச மயப்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும். அதனை இவ் அமைப்புச் செய்யும் என நினைக்கின்றேன் என்றார். எங்களுக்கு இதுமிகவும் உற்சாகம் தந்த விடயம்என்னவெனில் நாம் பல நாடுகளுக்குச் செல்கின்ற வேளை அங்கே அரச மட்டத்திலும் தான் இராஜதந்திர மட்டத்தில் நாங்கள் பேசுகின்ற போது நாங்கள் இப்படியான ஓர் செயற்பாடு நடந்துகொண்டிருக்கிறது எனக் கூறுகின்றபோது அவர்கள் உற்சாகமான கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள். இது எங்களுக்குத் தெரியாது அப்போது இனி வந்து உண்மையாக அதிகார பூர்வமாக வடகிழக்கில் இப்படியான ஓர்அமைப்புச் செயல் படுகிறது. இங்குள்ள அனைத்துத் துறைசார்ந்தவர்களும் இணைந்து உருவாக்குகின்றஇந்தக்கூட்டமைப்பு நிச்சயமாக நல்ல பலனைத் தேடித் தரும். இது நாம் நிலையான ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்ற பக்கச்சார்பற்ற ஓர் அமைப்பாகச் செயற்பட வேண்டும் என்று எமது முழு விருப்பமும் தலைவரது விருப்பமும் அதுதான் என்றார்,

பலர் வந்து எங்களைச் சந்திக்கின்ற வேளை இங்கு வருபவர்கள் மனித உரிமைகள் அமைப்புகள், சர்வதேச நிறுவனங்கள் எனக் கூறி வருபவர்கள் எங்களுடைய மக்களுக்கு மனித உரிமைகள் சம்பந்தமாக ஒன்றுமே புரியாதவர்கள் என்ற மாதிரிப் பேசியுள்ளனர். ஆனால் இம் மக்கள் எந்தளவிற்கு மனித வுரிமைகள் மீறல்களால் தாக்கப் பட்டுள்ளார்கள் என்ற செய்தி வெளியிடப்போவதில்லை. இன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டரை வருடங்களாகிறது. இக்காலத்தில் எமது மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அந்த மனிதவுரிமை மீறல்கள் என்பது மிகப்பயங்கரமானது. ஏனெனில் பதினைந்து இருபது வருடங்களாகத் தமது சொந்த இருப்பிடங்களைக் கூட போய்ப் பார்க்காத மக்கள் இருக்கிறார்கள். எமது மக்கள் ஒவ்வொரு வரும் எப்படிசித்திரவதைப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், மனிதவுரிமைகள் எவ்வளவு தூரம் இங்கு வேலை செய்கின்றது என்பது வெளியுலகிற்குத் தெரியாது. இதனை நாங்கள் சரியான முறையில் வெளியில் சர்வதேச மயப்படுத்தினோம் என்றால் அங்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்

எனவே இங்கு செயற்கையாக ஒன்றும் செய்யத்தேவையில்லை. நடக்கின்றதை உண்மையான சரியான முறையில் வெளியில் கொண்டு போனாற் போதுமானது. அதனை நீங்கள் சிறப்பாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார். (சோ,கு)

## 6 மாகாண...

குழுக்களையும் சேர்ந்த நான்காயிரத்து நூற்றி முப்பத்தி நான்குபேர் போட்டியிடுகின்றனர்.

இதன் போது 316 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.மேல், ஊவா, மத்திய, தென், வடமத்திய மற்றும் சப்பிரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தலே நடைபெறுகின்றன.

## மதியின் நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 1981 - 10 - 27



வீரச்சாவு 2000 - 07 - 10

### லெப். திலகா

### ஆறுமுகம் மதிவதனி

*"அன்பின் திருவுருவே*
*அழியாக் கலங்கரையே*
*ஆண்டு நான்கு ஆனதம்மா*
*எமைப் பிரிந்து சென்று -நீ*
*எப்போ காண்போம்*
*எப்படி மறப்போம்*
*ஏழு ஜென்மம் சென்றாலும்*
*உங்கள் பாச நினைவு*
*பசுமரத்தாணி போல என்றும்"*

நினைவுடன்

ஆறுமுகம் குடும்பத்தினர்.

இல 15/1 செல்வபுரம்,
வவுனிக்குளம். (4129)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.